Registered as Newspaper

# உதயன்

சுடர் : 36 கதிர் : 109 | திங்கட்கிழமை | பங்குனி 2 ஆம் நாள் 15 மார்ச் 2021 | வள்ளுவர் ஆண்டு 2051 | பக்கங்கள்: 16 விலை : ரூ.30 | செய்தி : 021 493 0000 விளம்பரம்: 021 493 1111

# ஐ.நா. அமர்வுக்காகவே நாடகமாடுகின்றது அரசு

## இந்தியாவை சமாளிக்கவே தேர்தல் அறிவிப்பு மக்கள் விடுதலை முன்னணி குற்றச்சாட்டு

கொழும்பு, மார்ச் 15

ஐ.நா. மனித உரிமைகள் சபை அமர்வு நடைபெற்று வருவதாலேயே தற்போதைய அரசு அவசர முடிவுகளை வெளிப்படுத்தி வருகின்றது. ஜெனிவாவில் இந்தியா மாகாண சபைத் தேர்தல் தொடர்பில் கருத்து வெளியிட்டமையே தற்போது மாகாண சபைகள் தொடர்பான நிலைப்பாடுகளை அரசு வெளியிடக் காரணம்.

15 ►



## ஈழத் தமிழர்கள் விவகாரத்தை தேர்தல் வியாபாரமாக்கக் கூடாது

*தமிழகக் கட்சிகளைச் சாடுகிறார் இந்திய வெளிவிவகார அமைச்சர்*

டில்லி, மார்ச் 15

ஈழத் தமிழர்கள் மீதான கரிசனை தேர்தலுடன் மட்டுப்படுத்தியதாக இல்லாமல் 'உண்மையானதாக' இருக்க வேண்டும் என்று இந்திய வெளிவிவகார அமைச்சர் எஸ்.ஜெய்சங்கர் தெரிவித்துள்

15 ►

## ஈழத் தமிழர்களின் பிரச்சினை தமிழக தேர்தலில் செல்வாக்கு!

சென்னை, மார்ச் 15

தமிழ்நாடு சட்டமன்றத் தேர்தல் நடைபெறவுள்ள நிலையில், ஈழத் தமிழர் பிரச்சினைகள் அதில் தாக்கம் செலுத்துகின்றன. தமிழகத்தின் பிரதான கட்சிகளில் ஒன்றான அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் தனது தேர்தல் அறிக்கையை நேற்று வெளியிட்டிருந்தநிலையில், ஈழத் தமிழர்கள் பிரச்சினைகள் தொடர்பான சில விடயங்களை இணைத்திருக்கின்றது. இந்தியாவின் முன்னாள் பிரதமர் ராஜீவ் காந்தி கொலை

12 ►

## சான்றுப் பொருள்கள் திருட்டு; பொலிஸ் உட்பட நால்வர் கைது

முல்லைத்தீவு, மார்ச் 15

முல்லைத்தீவு மாவட்ட நீதிவான் நீதிமன்றில் வழக்கு சான்றுப் பொருள்களைத் திருடிய குற்றச்சாட்டில் முல்லைத்தீவு பொலிஸ் நிலையத்தைச் சேர்ந்த இருவர் உட்பட நால்வர் கைது செய்யப்பட்டுள்ளனர் என்று முல்லைத் தீவுப் பொலிஸார் தெரிவித்தனர். இவர்கள் நேற்று

15 ►



## இலங்கையில் மனித உரிமைகள் உறுதிசெய்யப்படுவது அவசியம்

*அம்பிகையின் போராட்டத்துக்கு பிரிட்டிஷ் எம்.பி. ஆதரவு*

லண்டன், மார்ச் 15

இலங்கைத் தீவில் அனைவரது மனித உரிமைகளும் உறுதிசெய்யப்பட வேண்டும் என்று பிரிட்டன் தொழிற் கட்சி நாடாளுமன்ற உறுப்பினர் சேம் டெர்ரி தெரிவித்துள்ளார். இலங்கையை சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்தில் நிறுத்தக்கோரி

15 ►

## புலிகளின் மீதான தடைக்கு போதிய காரணம் இல்லை!

*பிரிட்டன் உள்துறை செயலாளருக்கு மேன்முறையீட்டு ஆணையம் சுட்டிக்காட்டு*

லண்டன், மார்ச் 15

தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பின் மீதான தடையை மறுபரிசீலனை செய்ய வேண்டும் என்று பிரிட்டன் உள்துறைச் செயலாளர் பிரிதி படேலுக்கு, தடை செய்யப்பட்ட நிறுவனங்கள் மேன்முறையீட்டு ஆணையம் உத்தரவிட்டுள்ளது என்று பிரிட்டன் ஊடகமான டெய்லி மெயில் செய்தி வெளியிட்டுள்து. தடை செய்யப்பட்ட மேன்முறை

15 ►

## வவுனியாவில் இருவருக்கு தொற்று உறுதி

வவுனியா, மார்ச் 15

வவுனியாவில் உள்ள ஆடைத் தொழிற்சாலை ஒன்றில் 23 பேர் இதுவரைகொரோ

15 ►

## வடக்கில் நேற்றும் 13 பேருக்கு தொற்று

யாழ்ப்பாணம், மார்ச் 15

வடக்கு மாகாணத்தில் நேற்று 13 பேருக்குக் கொரோனாத் தொற்று உறுதி

15 ►

"ஜெனிவா எண்டாலே இப்பிடி நாடகமாடுறதும், நல்ல பிள்ளையா வேஷம் போடுறதும் வழக்கம் தானே"




## மார்ச் 17 பேரணியில் அனைவரும் திரள்க!

*பல்கலை. மாணவர்கள் அழைப்பு*

யாழ்ப்பாணம், மார்ச் 15

தமிழினத்துக்கு எதிரான அநீதிகளுக்கு நீதி கோரி நாளை மறுதினம் 17ஆம் திகதி புதன்கிழமை நல்லூரில் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள பேரணியில்,

15 ►

## நல்லூர் பேரணி வெற்றிபெற அனைவரும் ஒன்றுபடுவோம்

**மாவை சேனாதிராசா வேண்டுகோள்**

யாழ்ப்பாணம், மார்ச் 15

தமிழ் மக்களுக்கு இழைக்கப்பட்ட அநீதிகளுக்கு நீதி கோரியும், அவ்வாறான அநீதிகள் மீள் நிகழாது தடுக்கப்பட வேண்டும் என்று வலியுறுத்தியும்,

15 ►

## ஒரு குடும்பத்தில் மணம் செய்த இருவர் மன்னார் விபத்தில் சாவு



மன்னார், மார்ச் 15

மன்னார்-மதவாச்சி பிரதான வீதியில் நேற்று நடந்த விபத்தில் இளம் குடும்பஸ்தர்கள் இருவர் உயிரிழந்துள்ளனர். இவர்கள் இருவரும் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த சகோதரிகளைத் திருமணம் செய்தவர்கள் என்று தெரியவருகின்றது. சிறுநாவற்குளம் பகுதியில்

12 ►

# இலங்கையை குற்றவியல் நீதிமன்றில் முற்படுத்த முஸ்லிம் மக்களும் ஆதரவு

## யாழ்.போராட்டத்திலும் பங்கேற்பு

**யாழ்ப்பாணம், மார்ச் 15**


**சர்வதேச குற்றவியல் நீதிமன்றில் இலங்கையை முற்படுத்த வேண்டும் என்பதை வலியுறுத்தி யாழ்ப்பாணத்தில் இடம்பெறும் சுழற்சி முறையிலான உணவு தவிர்ப்புப் போராட்டத்தில் முஸ்லிம் சிவில் செயற்பாட்டாளர்களும் நேற்று இணைந்து கொண்டனர்.**

சர்வதேச குற்றவியல் நீதிமன்றில் இலங்கையை முற்படுத்த வேண்டும் என்பதை வலியுறுத்தி யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மாணவர்களால் யாழ்ப்பாணம் நல்லூரில் ஆரம்பிக்கப்பட்ட உணவு தவிர்ப்புப் போராட்டம் நேற்று 15ஆவது நாளாகவும் இடம்பெற்றது. இந்தப் போராட்டத்துக்கு, தமிழ்த் தரப்பில் இருந்து, நாடாளுமன்ற உறுப்பினர்கள், தமிழ்த் தேசியவாதிகள், சிவில் சமூகத்தினர், மதத் தலைவர்கள் மற்றும் காணாமல் ஆக்கப்பட்டவர்களைத் தேடும் உறவுகள் எனப் பலரும் ஆதரவு தெரிவித்து வந்த நிலையில், நேற்று முஸ்லிம் சிவில் செயற்பாட்டாளர்களும் இணைந்து கொண்டு தமது ஆதரவை வழங்கியுள்ளனர்.

இலங்கை விவகாரம் ஐ.நா மனித உரிமைகள் பேரவையில் எடுத்துக்கொள்ளப்படவுள்ள நிலையில் யாழ்ப்பாணத்தில் இவ்வாறான அறவழிப் போராட்டம் அனைவருடைய கவனத்தையும் ஈர்த்துள்ளது. இதேவேளை கிழக்கிலும் இந்தப் போராட்டம் இடம்பெற்று வருவது குறிப்பிடத்தக்கது. (ப)

# கசிப்பு குற்றச்சாட்டு;

## தருமபுரத்தில் ஐவர் கைது



கிளிநொச்சி, மார்ச் 15

கிளிநொச்சி, தருமபுரம் பகுதியில் கசிப்பு உற்பத்தி செய்த குற்றச்சாட்டில், ஐவர் நேற்றுக் கைதுசெய்யப்பட்டு பொலிஸ் பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளனர் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

பொலிஸ் விசேட அதிரடிப்படையினருக்குக் கிடைத்த இரகசியத் தகவலையடுத்து தருமபுரம் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட வட்டக்கச்சி இராமநாதபுரம் காட்டுப் பகுதியில் கசிப்பு உற்பத்தி நிலையம் ஒன்று சுற்றிவளைக்கப்பட்டது. 12 பரல்கள் கோடா மற்றும் கசிப்பு உற்பத்திக்குப் பயன்படுத்தும் உபகரணங்கள் என்பவை இதன்போது மீட்கப்பட்டன. அத்துடன் அங்கிருந்து ஐந்து பேர் சந்தேகத்தின் பேரில் கைதுசெய்யப்பட்டு தருமபுரம் பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டனர். ஒப்படைக்கப்பட்ட ஐவரும் விசாரணைகளின் பின்னர் பொலிஸ் பிணையில் விடுவிக்கப்பட்டனர் என்று பொலிஸார் தெரிவித்தனர். (ப113)

# புதிய கட்டடத்தில் கொமர்ஷல் வங்கி

யாழ்ப்பாணம், மார்ச் 15

யாழ்ப்பாணம் மருத்துவமனை வீதியில் அமைந்துள்ள கொமர்ஷல் வங்கி இன்று முதல் தனது சொந்த பசுமைக் கட்டடத்தில் இயங்கவுள்ளது. இந்த நிகழ்வில் கொமர்ஷல் வங்கியின் தலைவரும் நீதியரசருமாகிய க.ஸ்ரீபவன், கொமர்ஷல் வங்கியின் முகாமைத்துவப் பணிப்பாளரும் பிரதான நிறைவேற்று அதிகாரியுமான சி.றெங்கநாதன் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். (ம)

## படகு மூலம் சட்டவிரோதமாக கனடா செல்ல முற்பட்டவர்களில் 11 பேர் வடக்கைச் சேர்ந்தவர்கள்

யாழ்ப்பாணம், மார்ச் 15

போலித் தரகர்களை நம்பி வெளிநாட்டு ஆசையில் புத்தளத்தில் இருந்து படகு மூலம் சட்டவிரோதமாக கனடா செல்ல முற்பட்டு, அண்மையில் கைதுசெய்யப்பட்டவர்களில் 11 பேர் வடக்கு மாகாணத்தைச் சேர்ந்தவர்கள் என்பது தெரிய வந்துள்ளது.

யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த ஆறு பேரும், முல்லைத்தீவைச் சேர்ந்த 5 பேருமாக 11 பேர் வடக்கு மாகாணத்தைச் சேர்ந்தவர்கள் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

புத்தளத்தில் இருந்து கடல் வழியாக படகுமூலம் கனடாசெல்ல முற்பட்டனர் என்ற குற்றச்சாட்டில் 23 பேர் கடந்த 11ஆம் திகதி கடற்படையால் கைதுசெய்யப்பட்டிருந்தனர். அவர்களிடம் விசாரணைகளை மேற்கொண்ட கடற்படையினர் அனைவரையும் கற்பிட்டி பொலிஸாரிடம் ஒப்படைத்தனர். இவர்கள் மறுநாள் 12ஆம் திகதி புத்தளம் நீதிமன்றில் முன்னிலைப்படுத்தப்பட்ட நிலையில், தலா இரண்டு ஆள்பிணையில் அவர்கள் விடுவிக்கப்பட்டனர். இவ்வாறு விடுவிக்கப்பட்டவர்களில் 9 பேர் மட்டக்களப்பையும், 6 பேர் யாழ்ப்பாணத்தையும், 5 பேர் முல்லைத்தீவையும், 3 பேர் திருகோணமலையையும் சேர்ந்தவர்கள் என்றும், இவர்களை ஏற்றிச் சென்ற வாகனத்தின் சாரதி புத்தளத்தைச் சேர்ந்தவர் எனவும் தெரிய வந்துள்ளது.

இவர்கள் தரகர்கள் ஊடாக கொழும்புக்கு அழைக்கப்பட்டு அங்கு விடுதி ஒன்றில் பல நாள்கள் தங்கவைக்கப்பட்ட பின்னர், அங்கிருந்து புத்தளத்துக்கு அழைக்கப்பட்டு, அங்கிருந்து வான் ஒன்றில் கற்பிட்டி களப்புக்கு அருகில் இறக்கிவிடப்பட்டனர் என்று விசாரணைகளில் தெரியவந்துள்ளது. (ப19)

# சு.க. ஆதரவாளர்களை தட்டியெழுப்பிய சுரேன்




முல்லைத்தீவு,மார்ச் 15

சுதந்திரக் கட்சியின் வன்னி மாவட்ட அமைப்பாளர் பதவியைப் பெற்றுக்கொண்ட நாடாளுமன்ற உறுப்பினர் சுரேன் ராகவன், அந்தக் கட்சியின் ஆதரவாளர்களை தேடிச் சென்று சந்தித்து வருகிறார்.

முல்லைத்தீவில் புதுக்குடியிருப்பு மற்றும் ஒட்டுசுட்டான் ஆகிய பகுதிகளுக்கு நேற்றுச் சென்ற அவர், அங்கு சுதந்திரக் கட்சியின் ஆதரவாளர்களைச் சந்தித்து கலந்துரையாடலில் ஈடுபட்டுள்ளார்.

சுதந்திரக் கட்சியைச் சேர்ந்தவர்கள் பிரதேச மட்டங்களிலும், கட்சி ரீதியிலும் தற்போது எதிர்கொள்ளும்பிரச்சினைகள் தொடர்பிலும், ஒருங்கிணைப்பு நடவடிக்கைகளை மேற்கொண்டு கட்சி என்ற ரீதியில் எவ்வாறு முன்னோக்கிச் செல்வது மற்றும் கட்சியை எவ்வாறு வளர்ப்பது போன்ற விடயங்கள் தொடர்பிலும் இதன்போது விரிவாக கலந்துரையாடப்பட்டுள்ளது. (ப-19)

# வாழ்வாதாரத்தை பந்தாடியது "கார்"



தாவடி.மார்ச் 15

வேகக் கட்டுப்பாட்டை இழந்த கார் ஒன்று வீதியோரமாக வாழ்வாதாரத்துக்காக அமைக்கப்பட்டிருந்த பழக்கடைக்குள் புகுந்ததில் பழக்கடை பலத்த சேதமடைந்தது. இதனால் பழக்கடையை நம்பி தனது வாழ்வாதாரத்தைக் கொண்டு நடத்தியவர் பாதிக்கப்பட்டுள்ளார். இந்தச் சம்பவம் யாழ்ப்பாணம் தாவடிச் சந்திப் பகுதியில் நேற்று மாலை 5.15 மணியளவில் இடம்பெற்றது.

மருதனார்மடம் பகுதியில் இருந்து யாழ்ப்பாணம் நோக்கிப் பயணித்த மோட்டார் காரே இவ்வாறு வேகக் கட்டுப்பாட்டை இழந்து ஒருவருடைய வாழ்வாதாரத்தை பந்தாடியுள்ளது. எனினும் தெய்வாதீனமாக எவருக்கும் உயிர்ச்சேதம் ஏற்படவில்லை என்று தெரிவிக்கப்பட்டது. சம்பவம் தொடர்பில் மேலதிக விசாரணைகளை சுன்னாகம் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ப-319)



வடக்கு மாகாண ஆளுநர் செயலகத்துக்கு முன்னால் தொடர் போராட்டத்தில் ஈடுபட்டுவரும் வடக்கு மாகாண சுகாதாரத் தொண்டர்களின் உணவு தவிர்ப்புப் போராட்டம் 7வது நாளாக நேற்றும் தொடர்ந்தது. (ப)

சர்வதேசத்திடம் நாட்டை

# காட்டிக் கொடுக்கிறாராம் கர்தினால் மல்கம் ரஞ்சித்

## சீறுகிறது கோத்தா அரசு

கொழும்பு, மார்ச் 15

ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்சவின் ஆட்சிக்காலத்தில் இலங்கையின் நீதித்துறை சுயாதீனமாகவே இயங்கு கின்றது. இங்கு என்ன பிரச்சினைகள் இடம்பெற்றாலும் அதற்கு உள்நாட்டு நீதித்துறை நீதியை வழங்கியே தீரும். அதைவிடுத்து சர்வதேசத்திடம் பேராயர் நீதியை எதிர்பார்ப்பது நாட்டைக் காட்டிக் கொடுப்பதற்கு ஒப்பானதாகும்.

இவ்வாறு பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் ரியர் அட்மிரல் சரத் வீரசேகர தெரிவித்தார்.

'உயிர்த்த ஞாயிறு தினத் தாக்குதல் தொடர்பில் நீதியைப் பெற்றுத் தருவோம் என்று நாட்டு மக்களுக்கு அரசு உறுதியளித்திருந்தது. எனவே, அரசியல் நலன் கருதி குற்றவாளிகளைப் பாதுகாக்கும் விதத்தில் அரசு செயற்பட்டால் நாம் சர்வதேச நீதிமன்றத்தின் உதவியை நாட நேரிடும் என்பதை மீண்டும் வலியுறுத்திக் கூற விரும்புகின்றேன்' இவ்வாறு பேராயர் கர்தினால் மல்கம் ரஞ்சித் ஆண்டகை தெரிவித்திருந்த கருத்துக்கு அமைச்சர் பதிலளிக்கும்போதே மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது, கடந்த நல்லாட்சி அரசின் காலத்தில்தான் உயிர்த்த ஞாயிறு தினத் தாக்குதல் நடைபெற்றது. உலக பயங்கரவாத அமைப்பான ஐ.எஸ். அமைப்பால் இஸ்லாமிய அரசு அமைக்கும் நோக்குடனேயே இலங்கையிலும் உயிர்த்த ஞாயிறு தினத்தில் தாக்குதல் நடத்தப்பட்டது. கடந்த ஆட்சியில் தேசிய பாதுகாப்பு பலவீனமாக இருந்த காரணத்தாலேயே இங்கு தாக்குதலை சஹ்ரான் குழுவினர் இலகுவாக நடத்தினர். எமது அரசு ஆட்சிக்கு வந்த பின்னர் தேசிய பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டது. உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் மறைந்திருந்த உயிர்த்த ஞாயிறு தினத் தாக்குதலுடன் நேரடியாகவும் மறைமுகமாகவும் தொடர்புபட்டவர்களைக் கைது செய்தோம்.

எனவே, இந்தத் தாக்குதலுடன் தொடர்புபட்ட அனைவருக்கும் தண்டனையை நிச்சயம் வழங்குவோம். பாதிக்கப்பட்ட கிறிஸ்தவ மக்களுக்கு நீதி கிடைத்தே தீரும். இதைவிடுத்து சர்வதேசத்திடம் பேராயர் நீதியை எதிர்பார்ப்பது நாட்டைக் காட்டிக் கொடுப்பதற்கு ஒப்பானதாகும்- என்றார். (ஓ.5,22)

# அரசுக்குள் எதிர்க்கட்சி!

'மொட்டு' உறுப்பினர்கள் குற்றச்சாட்டு

கொழும்பு, மார்ச் 15

அரசுக்குள்ளே எதிர்க்கட்சி ஒன்றை உருவாக்கும் முயற்சி இடம்பெற்று வருகின்றது என ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணியின் பின்வரிசை நாடாளுமன்ற உறுப்பினர்கள் குற்றம் சுமத்தியுள்ளனர்.

ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணி தலைமைத்துவம் குறித்தும், அரசின் செயற்பாடுகள் தொடர்பிலும் அரசின் பங்காளிக் கட்சிகளின் தலைவர்கள் சிலர் தொடர்ச்சியாக விமர்சனங்களை முன்வைத்து வருகின்றனர்.

இந்தநிலையில், ஈஸ்டர் தாக்குதல் தொடர்பான ஜனாதிபதி ஆணைக்குழுவின் அறிக்கையில் அரசியல் தலையீடுகள் ஏற்பட்டுள்ளன என்று அமைச்சர் விமல் வீரவன்ச குற்றம் சுமத்தியுள்ளார்.

அத்தோடு இஸ்லாமிய அடிப்படைவாதிகளை அரசில் இணைத்துக்கொண்டு பயணிக்கச் சிலர் முயற்சிக்கின்றனர் எனவும், இதனால் அரசில் பெரும் குழப்பங்கள் ஏற்படுகின்றன எனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இதேவேளை, அமைச்சர் உதய கம்மன்பில மற்றும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் உறுப்பினர்கள் சிலரும் அரசில் ஒரு சில தலைவர்கள் தொடர்பில் விமர்சனக் கருத்துக்களைத் தொடர்ச்சியாக முன்வைத்து வருகின்றனர். (எ-22)

# ஐ.நா.தீர்மானத்தை ஏற்றாக வேண்டும்

பிரிட்டன் வலியுறுத்து

கொழும்பு,மார்ச் 15

உள்நாட்டுப் போரின் போது இழைக்கப்பட்ட மனித உரிமை மீறல்களுக்குப் பொறுப்புக்கூறும் நடைமுறைகளை ஆரம்பிக்குமாறு இலங்கைக்கு அறிவுறுத்தும் ஐக்கிய நாடுகள் மனித உரிமை பேரவையின் தீர்மானத்தை, இலங்கை ஏற்றாக வேண்டும் என்று பிரிட்டன் வலியுறுத்தியுள்ளது.

பிரிட்டனின் நாடாளுமன்ற உறுப்பினர் விரேந்திர சர்மா, வெளிவிவகார பொதுநலவாய அமைச்சர் அகமட் பிரபுவுக்கு அனுப்பியுள்ள கடிதத்தில் இந்த வேண்டுகோளை விடுத்துள்ளார்.

இந்தத் தீர்மானத்திலிருந்து இலங்கை அரசு 2020 ஆம் ஆண்டில் விலகத் தீர்மானித்தமை ஆழ்ந்த ஏமாற்றமளிக்கின்ற விடயம்.

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் ஆணையாளர் மனித உரிமை பேரவையின் அமர்வுக்கு முன்னதாக எச்சரித்திருந்தது போன்று, கடந்த ஒரு வருட காலப் பகுதியில் கரிசனை தரும் போக்குகள் உருவாகியுள்ளன.

இலங்கையில் மனித உரிமை நிலவரம் மோசமடைகின்றது என்பதற்கான ஆரம்ப கட்ட எச்சரிக்கைகளாக இவையிருக்கலாம். 20 ஆவது திருத்தம் நிறைவேற்றப்பட்டமை இலங்கையின் ஜனநாய ஆட்சி மீதான தாக்குதலாக அமைந்துள்ளது.

இலங்கைக்கும் பிரிட்டனுக்கும் இடையிலான எதிர்கால வர்த்தக உறவுக்கு, இலங்கையில் இடம்பெற்ற மனித உரிமை துஷ்பிரயோகங்களுக்கு நீதியையும், பொறுப்புக்கூறலையும் உறுதி செய்வதை உறுதிசெய்ய வேண்டும்.

மனித உரிமை மீறல்களில் ஈடுபட்டவர்களின் சொத்துக்கள் மற்றும், விசாக்கள் ஆகியவற்றை முடக்கும் பிரிட்டனின் சர்வதேச தடை திட்டத்தின் கீழ் நடவடிக்கைக்கு உட்படுத்தப்பட வேண்டிய இலங்கையின் சிரேஷ்ட அதிகாரிகள் யார் என்பதையும் பிரிட்டனின் அமைச்சர்கள் கருத்திலெடுக்க வேண்டும் என்றும் அவர் அந்தக் கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார். (க-இ)

# தென்னாபிரிக்கத் தொற்று பரவினால் பெரும் ஆபத்து

*இலங்கை மருத்துவ சங்கம் எச்சரிக்கை*

கொழும்பு, மார்ச் 15

தென்னாபிரிக்காவில் பரவி வரும் புதிய வீரியம் கொண்ட கொரோனாத் தொற்று இலங்கைக்குள் பரவினால் புதிய கொத்தணியொன்று உருவாகும் அபாயம் ஏற்பட வாய்ப்பு உள்ளது என இலங்கை மருத்துவ சங்கம் எச்சரித்துள்ளது.

அத்துடன் இந்த வைரஸால் உயிரிழப்போரின் எண்ணிக்கை பல மடங்கு அதிகரிப்பதோடு அவசர சிகிச்சை பிரிவுகளின் தேவை அதிகரிக்கும் எனவும் சங்கத்தின் தலைவர் மருத்துவர் பத்மா குணரத்ன தெரிவித்துள்ளார்.

இந்த வைரஸ் தொற்றைக் கட்டுப்படுத்த 'ஒக்ஸ்போர்ட் எஸ்ட்ராஜெனிகா' தடுப்பூசி போதுமானது அல்ல எனவும் அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார். (ச-இ)

# தடுப்பூசி ஏற்றியோருக்கு தனிமைப்படுத்தல் இல்லை

சுகாதார அமைச்சு தீர்மானம்

கொழும்பு.மார்ச் 15

வெளிநாடுகளில் இருந்து நாடு திரும்பும் இலங்கையர்கள், இரண்டு கட்டங்களில் கொவிட் தடுப்பூசிகளைப் பெற்றிருப்பின், அவர்களை தனிமைப்படுத்த வேண்டிய தேவையில்லை என்று சுகாதார அமைச்சு தீர்மானித்துள்ளது.

புதிய சுகாதார வழிமுறைகளை உள்ளடக்கி வெளியிடப்பட்டுள்ள அறிக்கையில் இந்த விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

வெளிநாடுகளிலிருந்து நாட்டை வந்தடைந்து இரண்டு வாரங்களுக்கு முன்னர், சகல தகவல்களையும் சமர்ப்பித்து, சுகாதார சேவைகள் பணிப்பாளரின் அனுமதியைப் பெற வேண்டும். நாட்டுக்கு வருவதற்கு முன்னர் 96 மணித்தியாலங்களில் மேற்கொண்ட பரிசோதனைகள் மூலம், கொவிட் தொற்று இல்லை என்பதற்கான உறுதிச்சான்று மற்றும் நாட்டை வந்தடைந்து 48 மணிநேரத்துக்குள் மீண்டும் கொவிட் பரிசோதனை உள்ளிட்டவையும் நடைமுறையில் இருக்கும் என்றும் வழிகாட்டுதலில் குறிப்பிடப்பட்டுள்ளது. (க-இ)

# அசாத் சாலி கைதாவார்?

கொழும்பு,மார்ச் 15

முன்னாள் மாகாண ஆளுநர் அசாத் சாலியைக் கைது செய்து அவருக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுப்போம். இந்த விடயத்தை ஆராயுமாறு தனிப்பட்ட முறையில் குற்றப் புலனாய்வுப் பிரிவிடம் தெரிவித்துள்ளேன் என்று பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் சரத் வீரசேகர தெரிவித்தார். நாட்டின் சட்டம் எதுவாக இருந்தாலும், முஸ்லிம் சட்டத்தை மட்டுமே மதிக்கின்றேன் என்று அசாத் சாலி தெரிவித்திருந்தார்.

அசாத் சாலியின் கருத்து மதத் தீவிரவாதம் நிறைந்ததாக உள்ளது.

அவர் ஷரியா சட்டத்தின்படி செயல்பட விரும்பினால், சவூதி அரேபியாவுக்குச் செல்ல வேண்டும். அவர் இலங்கையில் வாழ முடியாது.

அவர் இலங்கையில் வாழும் வரை, இலங்கையில் நிலவும் சட்டத்தின் படியே செயல்பட வேண்டும் என்றும் அவர் தெரிவித்தார். (க-இ)

# ஆவணங்கள்தான் கொண்டு செல்லப்பட்டன அதிகாரங்கள் எவையும் பிடுங்கப்படவில்லை

## அரசின் செயலை நியாயப்படுத்துகிறார் நியமன எம்.பி. சுரேன் ராகவன்



**வவுனியா, மார்ச் 15**

**தமிழர் தேசம் இழந்த ஜனநாயகத்தையும், சம உரிமைகளையும் பெறுவதற்கான முயற்சிகளை நாம் எடுக்கவேண்டும் என்று நாடாளுமன்ற உறுப்பினரும், ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் வன்னி மாவட்டத் தலைவருமான சுரேன் ராகவன் தெரிவித்தார்.**

வவுனியா கந்தசுவாமி கோவிலில் விசேட பூஜை நிகழ்வுகளில் கலந்து கொண்ட பின் ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்தபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

மேலும் கொழும்பில் இருக்கும் காணி ஆணையாளரிடமிருந்து கிடைக்கவேண்டிய ஒழுங்கான ஒத்துழைப்புக்கள் வலுவாக கிடைக்க வேண்டும் என்பதற்காகவே வடமாகாண காணி ஆவணங்கள் அநுராதபுரத்துக்கு கொண்டுசெல்லப் பட்டுள்ளனவே தவிர வடமாகாணத்தைச் சேர்ந்த எந்த அதிகாரங்களும் பறிக்கப்படவில்லை. தற்போது நான் வன்னிக்கு நியமிக்கப்பட்ட தன் மூலம் தமிழ்த் தேசத்துக்காக செய்யவேண்டிய பணியை திரும்பவும் என்னிடம் இறைவன் வழங்கி உள்ளார் என்றே நான் நினைக்கிறேன். வன்னியை முழுமையாக மாற்றியமைக்க என்னுடைய முயற்சி களை எடுக்கவேண்டியுள்ளது. குறிப்பாக மன்னார் மாவட்டம் காலம் காலமாக பின்தங்கிய பகுதியாக இருக்கிறது.

அந்த நிலை மாறவேண்டும். எமது மக்களை ஜனநாயகத்தின் பாதையிலே நடத்திச்செல்வதற்கான வழிமுறைகளை கூட்டு முயற்சியாக செய்ய வேண்டும் என்பதே என்னுடைய பிரார்த்தனை- என்றார். (வ-110)

# வடக்கிலுள்ள காணிகளை தனியாருக்கு வழங்க முயற்சி

## ஆவணங்கள் இடமாற்றத்துக்கு ஜே.வி.பி. எதிர்ப்பு

கொழும்பு, மார்ச் 15

வடக்கிலுள்ள காணிகளை தனியார் நிறுவனங்களுக்கு வழங்கும் நோக்கிலேயே, யாழ்ப்பாணத்திலுள்ள காணி மறுசீரமைப்பு அலுவலகத்தின் ஆவணங்கள், அநுராதபுரத்துக்குக் கொண்டு செல்லப்பட்டிருக்கலாம் என்று மக்கள் விடுதலை முன்னணியின் நாடாளுமன்ற உறுப்பினர் விஜித ஹேரத் சந்தேகம் வெளியிட்டுள்ளார்.

ஜே.வி.பியின் ஊடகவியலாளர் மாநாடு நேற்று முற்பகல் கட்சியின் தலைமையகத்தில் நடைபெற்றது. இதன்போது யாழ்ப்பாணத்தில் உள்ள காணி மறுசீரமைப்பு ஆணைக்குழுவின் அலுவலகத்தில் இருந்த ஆவணங்களின் ஒரு தொகுதி அநுராதபுரத்துக்குக் கொண்டு செல்லப்பட்டுள்ளமை தொடர்பில் எழுப்பட்ட கேள்விக்குப் பதிலளிக்கையிலேயே, விஜித ஹேரத் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்தாவது,

நாட்டில் அனைத்து இடங்களிலும் காணிக் கொள்ளை இடம்பெறுகின்றது. குறிப்பாக அநுராதபுரம், பொலநறுவை மற்றும் அம்பாறை ஆகிய பகுதிகளில் மக்களின் காணிகள் சுவீகரிக்கப்பட்டு தனியார் நிறுவனங்களுக்கு வழங்கப்படுகின்றன. வனப்பகுதிகளைக் கூட விட்டுவைப்பதில்லை. வேடுவத்தலைவருக்குக் கூட வனத்தைப் பாதுகாப்பதற்கு நீதிமன்றம் செல்லவேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது. புத்தளம் மற்றும் கம்பஹா ஆகிய பகுதிகளில் உலக மரபுரிமைப் பகுதிகள் கூட நிறுவனங்களுக்கு வழங்கப்பட்டன. இந்த நோக்கத்துக்காகக் கூட யாழ்ப்பாணத்தில் இருந்த ஆவணங்கள் மாற்றப்பட்டிருக்கலாம். இது குறித்து ஆழமாக ஆராய வேண்டும்."

-என்றார். (க-44)

# புதிய பிறப்புச் சான்றிதழ்; சகலருக்கும் வழங்கத் திட்டம்

கொழும்பு, மார்ச் 15

இலங்கையர்கள் அனைவருக்கும் புதிதாக பிறப்பு சான்றிதழ் வழங்குவதற்கு பதிவாளர் நாயகம் திணைக்களம் நடவடிக்கை எடுத்துள்ளது என்று பதிவாளர் நாயகம் தெரிவித்துள்ளார்.

எதிர்வரும் ஜுலை மாதம் முதலாம் திகதி தொடக்கம் இந்த பிறப்புச் சான்றிதழ் வழங்கப்படவுள்ளது என்று தெரிவிக்கப்பட்டது.

அதற்கமைய அதில் ஒவ்வொரு நபருடைய பிறப்பு முதல் சகல தகவல்களும் அடங்கிய தரவுகள் கணினிமயமாக்கப்படும் என பதிவாளர் நாயகம் வீரசேகர தெரிவித்துள்ளார்.

அமைச்சர் சமல் ராஜபக்சவின் ஆலோசனைக்கமைய இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்றும் தெரிவிக்கப்பட்டது. (த-இ)

# புர்காவுக்கு தடை விதிப்பது மனித உரிமை மீறலே!



கொழும்பு, மார்ச் 15

இலங்கையில் புர்கா அணிவதற்குத் தடை விதிக்கும் செயற்பாடானது முஸ்லிம் பெண்களின் மனித உரிமைகளை மீறும் செயல் என்று மனித உரிமைகள் செயற்பாட்டாளர் செரீன் சரூர் தெரிவித்துள்ளார். இது குறித்து முஸ்லிம் பெண்களுடன் கலந்துரையாட வேண்டும் எனவும் அவர் வலியுறுத்தியுள்ளார்.

2019 ஆம் ஆண்டு இலங்கையில் இடம்பெற்ற பயங்கரவாதத்தாக்குதல் குறித்து விசாரணைகளை மேற்கொண்ட ஜனாதிபதி ஆணைக்குழு புர்கா குறித்த பரிந்துரையை முன்வைத்திருந்தது. இந்த நிலையில் புர்காவை தடைசெய்வதற்கான அமைச்சரவைப் பத்திரத்தில் பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் கடந்த வெள்ளிக்கிழமை கையெழுத்திட்டுள்ளார். இது முஸ்லிம் பெண்களின் மனித உரிமைகளை மீறும் செயற்பாடு என்று மனித உரிமைகள் செயற்பாட்டாளர். தெரிவித்துள்ளார். (ற-இ)

# தடுப்பூசி பெற்ற பின்பே எம்.பி ஹலீமுக்கு தொற்று

கொழும்பு, மார்ச் 15

கொரோனாவால் பாதிக்கப்பட்டுள்ள நாடாளுமன்ற உறுப்பினர் அப்துல் ஹலீம் கடந்த பெப்ரவரி மாதம் 25ஆம் திகதி அஸ்ட்ராஜெனகா கொரோனாத் தடுப்பூசியைப் பெற்றுக்கொண்டவர் எனத் தெரிய வந்துள்ளது. இந்த நிலையில் முதல் டோஸ் தடுப்பூசி ஏற்றிக் கொண்டவர்களுக்கு இரண்டாவது டோஸ் தடுப்பூசி பெற்றுக் கொள்ளும் வரை கொரோனா தொற்றுவதற்கான சந்தர்ப்பம் உண்டு என முன்னர் அறிவிக்கப்பட்டு இருந்தது. மேலும் தடுப்பூசி பெற்றுக்கொண்டவர்களும் சுகாதார கட்டுப்பாடுகளை அவசியம் பின்பற்ற வேண்டும் என்று அறிவுறுத்தப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (வ-இ)

# ஜனாஸாக்களை அடக்கம் செய்ய 25 மாவட்டங்களிலும் இடங்கள் தெரிவு

கொழும்பு, மார்ச் 15

கொரோனாத் தொற்றால் உயிரிழப்போரின் ஜனாஸாக்களை அடக்கம் செய்ய மாவட்ட ரீதியில் காணிகள் தெரிவு செய்யப்படவுள்ளன. ஒவ்வொரு மாவட்டத்திலும் பொருத்தமான காணிகள் தொடர்பில் தாமதமின்றி அறிவிக்குமாறு சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் மருத்துவர் அசேல குணவர்த்தன அனைத்து மாவட்ட செயலாளர்களுக்கும் அறிவித்துள்ளார். சடலங்களை அடக்கம் செய்வதற்கு சுகாதார அமைச்சு பரிந்துரைத்துள்ள விடயங்களை உள்ளடக்கிப் பொருத்த மான காணியைத் தெரிவு செய்யுமாறு மாவட்ட செயலாளர்களுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது. பரிந்துரைக்கப்படும் இடங்கள் பொருத்தமானவையா என்பது சம்பந்தப்பட்ட அதிகாரிகளால் ஆராயப்பட்ட பின்பே அனுமதி வழங்கப்படும் என அவர் மேலும் தெரிவித்துள்ளார். (வ-இ)

# மனித உரிமைகள் பேரவையில் விடுதலைப் புலிகளின் கொடி

## புரளி கிளப்புகிறது தென்னிலங்கை ஊடகம்

கொழும்பு, மார்ச் 15

தற்போது நடைபெற்றுவரும் ஜெனிவா மனித உரிமைகள் பேரவை மாநாட்டில் பற்கேற்றுள்ள அதிகாரிகள் மனித உரிமைகள் பேரவையில் விடுதலைப் புலிகளின் கொடியை ஏற்ற அனுமதித்துள்ளனர் என்று தென்னிலங்கை ஊடகமொன்று செய்தி வெளியிட்டுள்ளது.

அந்த ஊடகம் மேலும் தெரிவித்ததாவது,

விடுதலைப்புலிகளை ஐரோப்பிய ஒன்றியம் தடை செய்திருந்தாலும், சுவிஸ் பொலிஸார் விடுதலைப்புலிகளின் கொடியை ஏற்றுவதை நிறுத்தவில்லை. விடுதலைப் புலிகளின் கொடி மனித உரிமைகள் பேரவையின் முன்னுள்ள ஒரு சுரங்க சின்னம் அருகே ஏற்றப்பட்டுள்ளது. ஜெனிவா மனித உரிமைகள் பேரவையும் விடுதலைப்புலிகளின் கொடியை ஏற்றியதற்கு ஆட்சேபனை தெரிவிக்கவில்லை.

இதேவேளை ஜெனிவாவில் விடுதலைப்புலிகள் அமைப்பின் செயற்பாடுகளுக்குத் தடை விதிக்கப்படவில்லை என்பதுடன், அந்த அமைப்பின் ஆதரவாளர்கள் விடுதலைப்புலிகளின் கொடிகளுடன் தமது செயற்பாடுகளை முன்னெடுத்து வருகின்றனர் எனத் தெரிவித்துள்ளது. (ற-இ)

உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்



# கழுத்தறுப்பா? காத்தலா?

நடக்குமா? நடக்காதா? என்ற இருவேறு ஐயப்பாட்டில் இருந்த மாகாண சபைத் தேர்தலை, எவ்வளவு முடியுமோ அவ்வளவு விரைவாக நடத்த வேண்டும் என்று உத்தரவிட்டுள்ளார் ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ச. ஜெனிவா விவகாரத்தில் இந்தியா எடுக்கப்போகும் முடிவு இலங்கைக்கு சிலபல சிக்கல்களை ஏற்படுத்த வல்லதாக எதிர்பார்க்கப்பட்ட நிலையில், இந்தியாவைச் சமாளிக்கவும் தன் பக்கம் இழுக்கவும் இந்த அறிவிப்பை கொழும்பு விடுத்துள்ளது என்பதை மறுப்பதற்கில்லை.


நடைபெற்றுவரும் ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் சபையில் இலங்கைக்கு முன்னெப்போதும் இல்லாத எதிர்ப்பு ஏற்பட்டுள்ளது. இலங்கையில் சீனாவின் அளவுக்கதிகமான ஈடுபாட்டை இந்தியா இம்மியும் விரும்பவில்லை. இதை வெளிப்படையாகவே இந்தியா பல தடவைகள் விமர்சித்து வந்தது. எனினும் 'வீட்டோ' அதிகாரத்தைத் தன்வசம் கொண்டுள்ள சீனாவை ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் விவகாரத்திலும் உள்நாட்டு அபிவிருத்தியிலும் நம்பியிருக்கும் போக்கை கொழும்பு கைவிடவில்லை. கொழும்பின் இந்தப் போக்கு இந்தியாவுக்கு மட்டுமல்ல மேற்கத்தேய நாடுகளுக்கும் படுபாதகமானது. இதனால் சீனாவுக்கும் கொழும்புக்கும் எதிரான போக்கை மனித உரிமைகள் சபையில் கடைப்பிடிக்கும் கட்டாயத்துக்கு அவை தள்ளப்பட்டன.

சீனாவை மட்டும் நம்பிக்கொண்டு ஏனைய நாடுகளைப் பகைப்பதும் கொழும்புக்கு பேராபத்தாகவே முடியும். ஆக, சீனாவுக்கும் இந்தியாவுக்கும் இடையில் மதில் மேல் பூனையாக வழக்கம்போல் நிற்க வேண்டிய நிலை கொழும்புக்கு. இந்தப் பின்னணியில்தான் மாகாண சபைத் தேர்தல் தொடர்பான அறிவிப்பு கொழும்பால் விடுக்கப்பட்டுள்ளது.

13ஆவது திருத்தத்தின் மூலம் இலங்கையில் மாகாண முறைமையை ஏற்படுத்தியதில் இந்தியாவின் வகிபங்கு அதிகம். ஆனால் இந்த 13ஆவது திருத்தம் முழுவதுமாகக் கடாசப்பட வேண்டும் என்று கோத்தாபய ஆட்சியில் முக்கியஸ்தர்களாக இருக்கும் பலர் கருத்துத் தெரிவித்திருந்தனர். பொதுமக்கள் பாதுகாப்புத்துறை அமைச்சரின் கருத்தும்கூட அதே சாரப்படத்தான் இருந்தது. இந்த நிலையில் மாகாண சபைத் தேர்தல் அறிவிப்பின் மூலம், இந்தியா கொண்டுவந்த மாகாண சபை முறைகள் இலங்கையில் தொடர்ந்தும் கடைப்பிடிக்கப்படும். இலங்கையின் உள்விவகாரத்தில் இந்தியாவின் தலையீட்டையும் வகிபங்கையும் கொழும்பு மதிக்கின்றது என்ற செய்தி இந்தியாவுக்கு அனுப்பப்பட்டுள்ளது.

அத்துடன் இந்தியத் தூதுவர் கோபால் பாக்லே நேற்று முன்தினம் இலங்கைக்கு சுற்றுப் பயணம் மேற்கொண்டு தமிழ்த் தலைமைகளைத் தனித்தனியாக சந்தித்துப் பேச்சு நடத்தியமை, இந்தியப் பிரதமர் மோடி - கோத்தாபய இடையில் தொலைபேசியில் இடம்பெற்ற உரையாடல் என்பவையும் இந்தத் தேர்தல் அறிவிப்பில் கனதியாக தாக்கம் செலுத்தவல்லன என்பதை மறுப்பதற்கில்லை.

இவற்றின் மூலம், இந்தியாவோ மேற்கத்தேயமோ பூகோள அரசியல் என்பதை வைத்துத்தான் அடுத்தடுத்த நகர்வுகளைத் தீர்மானிக்கின்றன என்பது பட்டவர்த்தனமாகின்றது. ஆக, நீதிக்கான பொறிமுறைகள் மற்றும் அதன்பாலான தேடல்கள் என்பன இங்கில்லை. இலங்கையின் இந்தக் கண்ணாம்பூச்சி ஆட்டம் இந்தியாவுக்கு ஒன்றும் புதிதல்ல. பழகிப்போனதுதான். எனவே கடந்த காலங்களையும் கருத்தில்கொண்டு பாதிக்கப்பட்ட ஈழத் தமிழர்களுக்கு காத்திரமான நீதியை வழங்க இந்தியா முன்வர வேண்டும். ஆனால் காலங்காலமாக இலங்கை அரசைப் போலவே இந்தியாவும் தமிழர்களை நம்ப வைத்துக் கழுத்தறுப்பதையே வாடிக்கையாகக் கொண்டிருந்தது. அப்படி இருந்தும் கூட இன்னமும் இந்தியா மூலமே தமக்கு ஒரு தீர்வு கிடைக்கும் என தமிழர்கள் நம்புகிறார்கள். இந்தமுறையாவது அந்த நம்பிக்கைக்கு பாத்திரவாளியாக இந்தியா நடந்து கொள்ளுமா?




# அம்பாறை மாவட்ட இளைஞர்களும் யாழ். போராட்டத்தில் இணைந்தனர்

**கொழும்பு, மார்ச் 15**

**யாழ்ப்பாணத்தில் தொடர்ந்துகொண்டிருக்கும் நீதி வேண்டிய உணவு தவிர்ப்புப் போராட்டத்தில் அம்பாறை மாவட்ட இளைஞர்கள் சிலரும் கலந்துகொண்டு ஆதரவு வழங்கியுள்ளனர்.**

இலங்கையை சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்தில் பாரப்படுத்த வேண்டும் என்று வலியுறுத்தி யாழ்ப்பாணத்தில் இடம்பெற்றுவரும் சுழற்சி முறையிலான உணவு தவிர்ப்புப் போராட்டம் 15 ஆவது நாளாக நேற்றும் தொடர்ந்தது.

நீதி வேண்டிய இந்தப் போராட்டம் நல்லூர் நல்லை ஆதீனம் முன்பாக யாழ்ப்பாணம் மற்றும் கிழக்கு பல்கலைக் கழக மாணவர்களால் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது.

இந்தப் போராட்டத்துக்கு காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவினர்கள், அரசியல் பிரதிநிதிகள், சிவில் அமைப்பினர் மற்றும் மதத் தலைவர்கள் உட்படப் பலரும் தமது ஆதரவைத் தெரிவித்து வருகின்றனர். சிறிலங்காவை சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்தில் பாரப்படுத்துவதனூடாக, சிறிலங்கா அரசு புரிந்த போர்க் குற்றங்கள், மனித நேயத்துக்கு எதிரான குற்றங்கள் மற்றும் தமிழ் இனத்துக்கு எதிரான இன அழிப்பு என்பனவற்றுக்கு சர்வதேச நீதி வேண்டும். தமிழ் இனத்தின் மீதான இன அழிப்பு தொடராது இருப்பதற்கு தமிழ் மக்களின் நியாயமான கோரிக்கைகளான மரபுவழித் தாயகம், சுயநிர்ணய உரிமை, தமிழ்த் தேசியம் என்பவை அங்கீகரிக்கப்பட வேண்டும் ஆகிய கோரிக்கைகளை முன்வைத்து குறித்த சுழற்சி முறையிலான உணவு தவிர்ப்புப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (த-20)

ஒரு லட்சம் பேருக்கான வேலைத்திட்டத்தில்

# இணைக்கப்பட்டோருக்கு பயிற்சி வழங்க முடியாது!

தவிசாளர் நிரோஷ் தெரிவிப்பு

எமது பிரதேச சபையில் நிரந்தர நியமனத்துக்காக பலர் காத்திருக்கையில் ஒரு லட்சம் வேலைவாய்ப்பின் கீழான பயிற்சியாளர்களுக்கு பிரதேச சபையில் பயிற்சியளிக்க முடியாது என்று வலிகாமம் கிழக்கு பிரதேச சபைத் தவிசாளர் தியாகராஜா நிரோஷ் தெரிவித்துள்ளார்.

ஒரு லட்சம் வேலைவாய்ப்பின் கீழ் பயிற்சி பெறுவோருக்கான உள்ளகப் பயிற்சியை பிரதேச சபையில் பெற்றுக்கொடுக்கும் நோக்கில், இராணுவத்தின் பல்நோக்கு அபிவிருத்தி படைப்பிரிவு மற்றும் தேசிய பயிலுநர் கைத்தொழில் அதிகார சபை அதிகாரிகள் ஆகியோர் வலிகாமம் கிழக்கு பிரதேச சபைத் தவிசாளர் தியாகராஜா நிரோஷை கடந்த வெள்ளிக்கிழமை சபையில் சந்தித்துக் கலந்துரையாடினர். இதன்போது அவர்கள் தமது திட்டத்தின் கீழ் பயிற்சி பெறுவோர் ஏற்கனவே சுகாதாரத் திணைக்களத்தில் பயிற்சி பெற்றுள்ளனர் எனவும் தற்போது அவர்களுக்கான தொடர் பயிற்சியை தமது உள்ளூராட்சி மன்றத்தில் தொடர்வதற்கு ஏற்பாடு செய்ய ஆவண செய்யுமாறும் கேட்டுக்கொண்டனர்.

இதற்கு தவிசாளர் நிரோஷ் தெரிவித்ததாவது. எமது சபையில் ஏற்கனவே பலர் வெளிவாரியாகப் பணியாற்றி வருகின்றனர். அவர்களில் பலர் நிரந்தர நியமனத்துக்காக நேர்முகத் தேர்வுகளில் தோற்றி அந்த விபரங்கள் அரசதுறை நிறுவனங்களுக்காக அனுமதிக்கப்பட்ட பதவிகளுக்கு ஆட்சேர்ப்புச் செய்தல் விதிமுறைக்கு அமைய, முகாமைத்துவ சேவை திணைக்களத்துக்கு அனுப்பப்பட்டுள்ளன.

எனினும், அரசாங்கத்தால் நியமனங்கள் நிறுத்தி வைக்கப்பட்டுள்ளன. இதனால் வருடக் கணக்கில் சபைகளில் தொண்டாற்றிய பலர் நியமனம் இன்றித் தவிக்கின்றனர். அவர்களுக்கு நியமனங்கள் வழங்கப்படாதிருக்க உள்ளூராட்சி மன்றங்களில் பயிற்சிக்காக புதியவர்கள் வருவது பொருத்தமற்றது. ஒரு லட்சம் வேலைவாய்ப்பில் பயிற்சிக்கு வருபவர்கள் இங்கு நியமனத்தைக் கோர சட்டரீதியான உரித்தற்றவர்களாகக் காணப்படினும், அரச கொள்கையில் மாற்றங்கள் ஏற்படுத்தப்பட்டால் தேவையற்ற சிக்கல்கள் ஏற்படும். ஏற்கனவே பணியில் உள்ளவர்கள் பாதிப்படைவர். எனவே பயிற்சி ஆயினும் புதியவர்களை உள்ளீர்ப்பது எமது தொழிலாளர்களுக்கு சந்தேகத்தை ஏற்படுத்தும்.

இந்தநிலையில் புதியவர்களுக்கு தொழிற் பயிற்சியை எமது சபையால் வழங்க முடியாது என்றார். (ற-இ)

# வவுனியா ரயில் கடவையில் விபத்துக்கள் ஏற்படும் அபாயம்!

## நகர சபை உறுப்பினர் விசனம்



**வவுனியா, மார்ச் 15**
**வவுனியா ரயில்க் கடவையில் வீதிக்கு குறுக்காக நிறுத்தப்படும் பாதுகாப்புத்தடை சீரின்மையால் விபத்துக்கள் ஏற்படும் அபாயம் உள்ளது என்று வவுனியா நகரசபை உறுப்பினர் ஜானுயன் விசனம் தெரிவித்துள்ளார்.**

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது, வவுனியா தலைமை ரயில் நிலையத்துக்கு அருகில் அமைந்துள்ள ரயில் கடவையில், ரயில் வருகை தரும் போது பிரதான வீதிக்கு குறுக்காக நிறுத்தப்படும் பயணத்தடை ஒழுங்கான முறையில் பொருத்தப்படாமல் காணப்படுகிறது. இதனால் வாகனங்களில் பயணிக்கும் பலர் ரயில் வருகை தரப்போவதை உணர்ந்தும் பாதுகாப்பற்ற இக் கடவையை கடந்துசெல்கின்றனர். தொடர்ச்சியாக இடம்பெற்றுவரும் இச் செயற்பாட்டால் விபத்துக்கள் ஏற்படக் கூடிய சந்தர்ப்பங்கள் அதிகமுள்ளன. இந்த வீதியானது அதிக வாகனப் போக்குவரத்து நிறைந்ததாக காணப்படுகின்றது. எனவே இவற்றைக் கருத்தில் கொண்டு விபத்துக்களைத் தடுக்கும் நோக்குடன், ரயில் வருகை தரும் சந்தர்ப்பங்களில் குறித்த கடவையால் முற்றாக பயணிப்பதற்கு தடை ஏற்படுத்தும் வகையில் கடவையில் திருத்தம் செய்ய வேண்டும். ரயில் கடவைகளால் பயணம் செய்யும் பொதுமக்களும் விதிமுறைகளைப் பேணி அவதானத்துடன் செயற்பட வேண்டும் - என்றார். (ற-110)



# 'பண்டார வன்னியனார்' வரலாற்று நூல் வெளியீடு

வவுனியா, மார்ச் 15
வரலாற்று ஆய்வாளர் அருணாசெல்லத்துரையின் "பண்டாரவன்னியனார்' வரலாற்று ஆய்வு நூல் வெளியீட்டுவிழா நிகழ்வு வவுனியா நகரசபை மண்டபத்தில் நேற்று இடம்பெற்றது.

ஜனாதிபதி சட்டத்தரணி மு.சிற்றம்பலம் தலைமையில் இடம்பெற்ற இந்த நிகழ்வில் தேசிய கல்வியியற்கல்லூரியின் ஓய்வுநிலை பீடாதிபதி க. சுவர்ணரயாவின் வாழ்த்துரையைத் தொடர்ந்து நூல்வெளியிட்டு வைக்கப்பட்டது. நூலை சட்டத்தரணி சிற்றம்பலம் வெளியிட்டுவைக்க அதன் முதற்பிரதியை வவுனியா பலநோக்கு கூட்டுறவுச் சங்கத்தின் தலைவர் வீ.ஜெகசோதிநாதன் பெற்றுக்கொண்டார். நூலுக்கான மதிப்பீட்டுரையை புளியங்குளம் ஆசிரியர் வாண்மை விருத்தி நிலையத்தின் முகாமையாளர் சு.ஜெயச்சந்திரனும், பதிலுரையை நூல் ஆசிரியரும் நிகழ்த்தினர். (வ-110)

# கஞ்சாவுடன் இருவர் கைது!

வவுனியா, மார்ச் 15
வவுனியா குடியிருப்புப் பகுதியில் கஞ்சா போதைப் பொருளுடன் நேற்றுமுன்தினம் இரு இளைஞர்கள் வவுனியாப் பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

அந்தப் பகுதியில் நின்ற இருவரையும் பொலிஸார் சந்தேகத்தின் அடிப்படையில் சோதனை செய்தபோது கஞ்சா போதைப்பொருளை உடைமையில் வைத்திருந்த குற்றச்சாட்டில் இவர்களைப் பொலிஸார் கைதுசெய்ததுடன், மோட்டார் சைக்கிளையும் பறிமுதல் செய்தனர். இந்தச் சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை வவுனியா பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர். (ற-18)



# ரூ.47 மில்லியன் செலவில் குத்துபாலம் புனரமைப்பு

மன்னார், மார்ச் 15
அரசாங்கத்தின் கிராமிய வீதிகள் புனரமைப்புத் திட்டத்தின் கீழ், முல்லைத்தீவு மாந்தை கிழக்கில் சிவபுரம்-செல்வபுரம் வீதியிலுள்ள குத்துபாலம், 47 மில்லியன் ரூபா செலவில் 40 மீற்றர் நீளம் கொண்டதாக புனரமைக்கப்படவுள்ளது. இதற்கான அங்குரார்ப்பண நிகழ்வு நேற்றுமுன்தினம் இடம்பெற்றது.

'சுபீட்சத்தின் நோக்கு' கொள்கைப் பிரகடனத்துக்கு அமைய, நாடு தழுவிய ரீதியில் மேற்கொள்ளப்படுகின்ற 20 ஆயிரம் கிராமியப் பாலங்களைப் புனரமைக்கும் வேலைத்திட்டத்தின் பிரகாரம் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும் அபிவிருத்திக் குழுத் தலைவருமான காதர் மஸ்தானின் வேண்டுகோளின் அடிப்படையில் இந்தப் பாலம் புனரமைப்புச் செய்யப்படவுள்ளது.

மாந்தை கிழக்கு பிரதேச சபைத் தவிசாளர், செயலாளர், சபை உறுப்பினர்கள் வீதி அபிவிருத்தித் திணைக்கள உத்தியோகத்தர்கள் மற்றும் விவசாயிகள், கிராம அமைப்புக்களைச் சேர்ந்தவர்கள் எனப் பலர் இதில் கலந்து கொண்டனர். (ற-19)

# கரம்பைக்குறிச்சியில் திருட்டுக்கள் அதிகரிப்பு!

## நடவடிக்கை எடுக்குமாறு மக்கள் கோரிக்கை

சாவகச்சேரி மார்ச் 15
வரணி கரம்பைக்குறிச்சிப் பகுதியில் மணல் மற்றும் மாடுகள் திருட்டு அதிகரித்து வருகின்றன என்று அந்தப் பகுதி மக்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

கரம்பைக் குறிச்சி மேற்குப் பகுதிகளில் பகல் வேளைகளில் மேய்ச்சலுக்கு விடப்படும் மாடுகளையும், இரவு வேளைகளில் தமது வளவுகளுக்குள் கட்டப்பட்டிருக்கும் மாடுகளையும் இனம்தெரியாதோர் கடத்திச் செல்கின்றனர். இதைத் தடுக்கச் செல்வோரை அவர்கள் ஆயுதங்களைக் காட்டி அச்சுறுத்தி வருகின்றனர்.

அதுமட்டுமன்றி இந்தத் திருட்டுச் சம்பவத்தில் ஈடுபடுவோர் ஆட்களில்லாத வீடுகளில் பொருத்தப்பட்டுள்ள இரும்புக் கதவுகளையும் திருடிச் செல்கின்றனர்.

இதேவேளை, கரம்பைக்குறிச்சி கிழக்குப் பகுதியில் அறுவடை செய்யப்பட்ட வயல்களின் வரம்புகள் மற்றும் வாய்க்கால்களையும் மணல் தேவைக்காக இரவு வேளைகளில் வெட்டி ஏற்றிச் செல்கின்றனர்.

இது தொடர்பில் கொடிகாமம் பொலிஸார் தகுந்த நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (ற-9)

# பொலிஸ் பொறுப்பதிகாரி குருநாகலுக்கு இடமாற்றம்

வவுனியா, மார்ச் 15
வவுனியா தலைமை பொலிஸ் நிலையத்தின் போக்குவரத்து பொறுப்பதிகாரியாக கடமையாற்றிய காமினி திஸாநாயக்க குருநாகல் பொலிஸ் நிலையத்துக்கு இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார்.

கடந்த 3 வருடங்களாக வவுனியா தலைமை பொலிஸ் நிலையத்தில் அவர் கடமையாற்றி வந்திருந்தார். இந் நிலையில் இன்று தொடக்கம் குருநாகல் தலைமை பொலிஸ் நிலையத்தில் கடமையாற்றுவதற்கு இடமாற்றம் வழங்கப்பட்டுள்ளது. இதேவேளை வவுனியாவுக்கான புதிய போக்குவரத்து பொலிஸ் பொறுப்பதிகாரி நியமிக்கப்படும் வரையில் வவுனியா போக்குவரத்து பிரிவின் பதில் பொலிஸ் பொறுப்பதிகாரி கடமைகளை மேற்கொள்வார் என்று தெரிவிக்கப்படுகின்றது. (வ-110)



# கொட்டப்படும் கழிவுகளால் பயணிகளுக்கு அசௌகரியம்

முல்லைத்தீவு, மார்ச் 15
முல்லைத்தீவு புதுக்குடியிருப்பு நகரத்தின் கழிவுகள், புதுக்குடியிருப்பு ஒட்டுசுட்டான் பிரதான வீதியோரங்களில் கொட்டப்படுவதால், அந்தப் பகுதியால் போக்குவரத்துச் செய்வோர் கடும் நெருக்கடிகளை எதிர்கொண்டு வருகின்றனர் என்று அந்தப் பகுதி மக்கள் விசனம் தெரிவிக்கின்றனர்.

அவர்கள் மேலும் தெரிவித்ததாவது, புதுக்குடியிருப்பு நகரத்தின் கழிவுகள் நகரிலிருந்து 8 கிலோமீற்றர் தூரத்திலுள்ள மன்னங்கண்டல் பகுதியில், புதுக்குடியிருப்பு பிரதேச சபையால் கொட்டப்படும் நிலையில், இரவு வேளைகளில் கழிவுகளைக் கொண்டு வருபவர்கள் புதுக்குடியிருப்பு ஒட்டுசுட்டான் வீதிக்கு அருகில் கழிவுகளைக் கொட்டுகின்றனர்.

இதனால் அக்கழிவுகளிலிருந்து வீசுகின்ற துர்நாற்றம் அவ்வழியால் போக்குவரத்துச் செய்கின்ற பயணிகளுக்கு நெருக்கடிகளை உருவாக்குகின்றது.

கட்டடக் கழிவுகள் உட்பட சகல கழிவுகளும் இரவில் களவாகக் கொட்டப்படுகின்றன - என்றனர். (ற-13)

## இன்றைய நாள்

**மேடம்**: வெளிநாட்டு பயணத்துக்கு ஏற்பாடு செய்வீர்கள். பிரச்சினைகளுக்குத் தீர்வு கிடைக்கும். தேவையற்ற பயங்கள் நீங்கும். உற்சாகமாக செயல்பட்டு வெற்றி இலக்கை எட்டுவீர்கள்.

**இடபம்**: பயணங்கள் அலைச்சல் தரும். கோபத்தைக் குறையுங்கள். தேக்கநிலை மாறித் தெளிவு பிறக்கும். முயற்சி வெல்லும். வளைந்து கொடுக்க வேண்டிய சூழலில் அனுசரித்துச் செல்வீர்கள்.

**மிதுனம்**: முயற்சிகளில் வெற்றி கிடைக்கும். பரபரப்பான நாள். உங்களைவிட இளையவருடன் நட்பு கிடைக்கும். உறவினர், நண்பர்களின் சந்திப்பு மகிழ்ச்சி அளிக்கும்.

**கடகம்**: பல நாள் பார்க்க விரும்பிய ஒருவரின் சந்திப்பு இன்று அமையும். பல நாள்கள் முயன்ற வெற்றிக்கனியை எட்டிப்பிடித்து மகிழ்வீர்கள். குடும்பத்தில் ஒருவரின் திருமணக்கனவு நனவாகும்.

**சிம்மம்**:தேவையற்ற பேச்சுக்களை அறவே தவிர்க்காவிட்டால் பிரச்னை வரும். வெற்றிக்காக கவனமுடன் செயல்படுவீர்கள். பிறர் உங்களால் நன்மை பெறுவர்.

**கன்னி**: எதிர்பார்த்த நபர்களின் உதவி எளிதில் கிடைக்கும். திருமண விடயத்தில் அவசர முடிவுகள் எடுப்பதைத் தவிர்க்கவும் வீட்டில் சுபநிகழ்ச்சி நடைபெறுவதற்கான அறிகுறி தோன்றும்.

**துலாம்**: விரும்பிய வகையில் உங்கள் ஆசை ஒன்றைத் தீர்த்துக் கொள்வீர்கள். வருங்கால நலன் கருதி திட்டங்கள் வகுக்கும்போது நன்கு யோசியுங்கள். வாய்ப்பு ஒன்று கைகூடும்.

**விருச்சிகம்**: மனதுக்கு இனிய சம்பவம் நடைபெறும். வாக்குவாதம் வேண்டாம்.சுழன்று பணிபுரிந்து மேலதிகாரியின் பாசத்தைப் பெறுவீர்கள். வெற்றித் திட்டம் எளிதில் நிறைவேறும்.

**தனுசு**: குடும்பத்தினர்கள் உங்கள் சொல்லுக்கு மதிப்புக் கொடுப்பர். நினைத்த நேரத்தில் நினைத்த விடயத்தைச் செய்து முடிப்பீர்கள். விரும்பிய வாய்ப்புகள் கைகூடுவதற்கான அறிகுறி தோன்றும்.

**மகரம்**: வருங்கால நலன் கருதி சேமிக்கத் தொடங்குவீர்கள். பணவரவு உண்டு. சிறு பயங்கள் உண்டாகி இன்றே தீரும். புதிய ஒப்பந்தங்களில் கையெழுத்திட்டு மகிழ்வீர்கள்.

**கும்பம்**: மனதில் ஏற்பட்ட குழப்பத்துக்குத் தெளிவு பிறந்து நிம்மதி வரும். பயணங்களால் விருப்பங்கள் நிறைவேறும். பணவரவு கூடும். வருமானம் திருப்தி தரும். சகோதரர்களுக்கு உதவுவீர்கள்.

**மீனம்**: திட்டம் வகுத்து முக்கிய புள்ளிகளைச் சந்திப்பீர்கள். உங்கள் தவறால் ஏற்பட்ட பிரச்னைகள் தீரும். அவசரமின்றிச் செயல்பட்டால் அதிகம் சாதிக்க முடியும்.

## தவக்கால சிந்தனை

### போதை பாவத்தின் கருவறை

பல்வேறு பாவச் சோதனைகள் எம்மைப் பலவாறு ஆட்டிப்படைக்கின்றன. இறை சாயலாகப் படைக்கப்பட்ட நாம் உலக கவர்ச்சிகளுக்கும் பணம், பதவி, இன்பம், போதை மற்றும் இன்னபிற இச்சைகளுக்கும் இடம்கொடுக்கின்றோம். பலவழிகளில் இவை பிறரால் திணிக்கப்படுகின்றன.

இன்றைய இளைய சமுதாயத்தை சீரழிக்க பல்வேறு யுக்திகள் கையாளப்படுகின்றன. போதைப் பொருள், போதைப் பாக்குகள் அதிகரித்த மதுப்பாவனை இலத்திரனனியல் ஊடக வழி ஆபாச காணொலிகள் எனப் பல முனைகளில் இந்த யுக்திகள் முன்னெடுக்கப்படுகின்றன. பாடசாலை மாணவர்கள், இளைஞர், யுவதிகள் குறிவைக்கப்படுகிறார்கள். இந்த சமூக விரோத, சட்டவிரோத வியாபாரங்களால் கொலை, கொள்ளை, களவு, வழிப்பறிகள் அதிகரிக்கின்றன. கல்வி, பொருளாதாரம், எதிர்காலம், சமூக சிந்தனை, மொழி, இன, மத உணர்வுகள் மறக்கப்பட்டு கிணற்றுத் தவளைகளாக இன்றைய இளைய சமுதாயம் மாறிவிட்டது.

போதைப்பொருள் கடத்தல்களும் விநியோகமும் நாளுக்குநாள் திட்டமிடப்பட்டு வலையமைப்பு முறையில் பெரும் 'மாபியாக்கள்' ஊடாக நடைபெற்று இளையோரின் வாழ்வு அழிக்கப்படுகிறது.

இயேசு கூறுகிறார் 'பாவச்சோதனை வருவதை தவிர்க்க முடியாது. ஆனால் ஐயோ! அதற்கு காரணமாய் இருப்பவருக்குக் கேடு. இந்தச் சிறியோரை பாவத்தில் விழச் செய்வோரின் கழுத்தில் எந்திரக்கல்லைக் கட்டி அவரைக்கடலில் தள்ளி விடுவது நல்லது.' (லூக் 17:1-2).

சமூகத்தையும் எதிர்கால தலைமுறையையும் பண்பாடுகளையும் பாதுகாப்பது அனைவரது பொறுப்பும் கடமையுமாகும் என்பதை உணர்ந்து விழிப்புடன் செயற்படுவோம்.

எஸ்.யேசுதாஸ்
கொழும்புத்துறை

# இரும்புக்கு விலைபோன பேருந்துகளில் நூலகங்கள்

## பெருமைகொள்கிறார் அமுனுகம




**கொழும்பு,மார்ச் 15**

**கடந்த ஆட்சியில் இரும்புக்கு விற்பனை செய்யப்பட்ட பேருந்துகளை தற்போது நாம் நூலகங்களாக மாற்றியமைத்து, வசதியற்ற பாடசாலைகளுக்கு நன்மைகளைப் பெற்றுக் கொடுத்துள்ளோம்.**

இவ்வாறு பேருந்து போக்குவரத்துச் சேவைகள் இராஜாங்க அமைச்சர் திலும் அமுனுகம தெரிவித்தார்.

மீளமைக்கப்பட்ட பேருந்துகளை நூலகங்களாக மாற்றி, பாடசாலைகளுக்குக் கையளிக்கும் நிகழ்வில் அவர் இதனைத் தெரிவித்தார்.

கடந்த அரசால் பழைய பேருந்துகள் கடலில் போடப்பட்டன. இ.போ.ச. ஊழியர்கள் அதற்கு விருப்பம் தெரிவிக்கவில்லை. இந்தத் திட்டத்தின் மூலம் போக்குவரத்துப் பாவனையில் இருந்து நீக்கப்படும் பேருந்துகள் முழுமையான நூலகங்களாக மாற்றப்படுகின்றன. நூலக வசதியற்ற பாடசாலைகளுக்கு நாம் பேருந்துகளைப் பெற்றுக் கொடுக்கிறோம். அதில் இலவச இணைய வசதியும் உள்ளடங்குகிறது. மேலும் 34 பேருந்துகள் இதேபோன்று புதுப்பிக்கப்பட்டு வருகின்றன. அவற்றையும் பாடசாலைகளுக்குக் கையளிக்க நடவடிக்கை எடுக்கப்படும்- என்றார்.

வாசிப்பு என்பது மிக முக்கியமானதொரு விடயமாகும். அதன் மூலம் பிள்ளைகளுக்கு சமூக, பொருளாதார, அரசியல் அறிவைப் பெற்றுக்கொள்ள முடியும். நாம் இன்றைய சூழலுக்குப் பொருத்தமான புத்தகங்கள் மற்றும் இணைய வசதிகளைப் பெற்றுக்கொடுக்க நடவடிக்கை மேற்கொள்வோம்" இவ்வாறு நிகழ்வில் உரையாற்றிய போக்குவரத்து அமைச்சர் காமினி லொகுகே மேலும் தெரிவித்தார். (க)

சட்ட விரோத மணல் அகழ்வு:

# எதிர்ப்பை வெளிப்படுத்தினால் உயிருக்கு உத்தரவாதம் இல்லை

### கண்டாவளை மக்கள் கவலை

கிளிநொச்சி, மார்ச் 15

கண்டாவளை பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட பகுதிகளில் அதிகரித்துள்ள சட்ட விரோத மணல் அகழ்வுச் செயற்பாடுகளைக் கட்டுப்படுத்துமாறு அப் பகுதி மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

இவ்வாறான செயற்பாடுகளால் இயற்கை வளங்கள் அழிக்கப்படுகின்றன. கண்டாவளை மண் எனக் கூறி கடற்கரை மணல் கலந்தும் விற்கப்படுகின்றது. இவற்றை கனியவளப் பிரிவினர் கண்டு கொள்வதில்லை. இது தொடர்பில் பல தடவைகள் முறைப்பாடு வழங்கியும் பயனில்லை. இவற்றுக்கு எதிர்ப்பை வெளியிட முடி யாத நிலையில் நாம் உள்ளோம். அவ்வாறு எதிர்ப்பு வெளியிட்டால் எமது உயிருக்கு உத்தரவாதம் இல்லை என மக்கள் மேலும் தெரிவிக்கின்றனர். (வ-316)

# பழைய பேருந்துகளில் பாடசாலை நூலகங்கள்

கொழும்பு.மார்ச் 15

போக்குவரத்துப் பாவனையிலிருந்து நீக்கப்பட்ட இலங்கை போக்குவரத்துச் சபைக்குச் சொந்தமான பேருந்துகள், மீளப்புதுப்பிக்கப்பட்டு, நூலகங்கள் அற்ற பாடசாலைகளுக்கு பேருந்து நூலகங்களாக கடந்த வெள்ளிக்கிழமை கையளிக்கப்பட்டன. அதற்கமைய 20 மாவட்டங்களில் நூலக வசதியற்ற 20 பாடசாலைகளுக்கு அவற்றின் அதிபர்களிடம் இவை கையளிக்கப்பட்டன.

'பேருந்தில் எதிர்காலத்துக்கு' என்ற திட்டத்தின் இரண்டாம் கட்டம், பிரதமர் மஹிந்த ராஜபக்ச தலைமையில் கடந்த வெள்ளிக்கிழமை ஆரம்பிக்கப்பட்டது. அதேவேளை இந்தத் திட்டத்தின் முதலாம் கட்டத்தில் 5 மாவட்டங்களில் தெரிவு செய்யப்பட்ட 5 பாடசாலைகளுக்கு பேருந்து நூலகங்கள், ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்சவால் கையளிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (க)

# கொவிஷீல்ட் தடுப்பூசி ஏற்றிய 30 பேருக்கு குருதி உறைதல்

சுகாதார பரிசோதகர்கள் சங்கம் தகவல்

**கொழும்பு, மார்ச் 15**
**இலங்கையில் கொவிஷீல்ட் தடுப்பூசி ஏற்றிக்கொண்டவர்களில் இதுவரை 30 பேருக்கு, குருதி உறைதல் ஏற்பட்டுள்ளது என்று பொதுச் சுகாதாரப் பரிசோதகர்கள் சங்கத்தின் செயலாளர் மஹிந்த பாலசூரிய தெரிவித்துள்ளார்.**

நாடுமுழுவதும் சுகாதார அமைச்சின் பரிந்துரையின் அடிப்படையில், கொரோனாத் தொற்றைத் தடுப்பதற்காக கொவிஷீல்ட் தடுப்பூசி செலுத்தும் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படுகின்றன. இதனை பெற்றுக் கொண்டோரில் சில ஒவ்வாமைத் தன்மைகள் அறிக்கையிடப்படுகின்றன. அவர்களில் 30 பேருக்கு குருதி உறைதல் ஏற்பட்டுள்ளது. அது தவிர காய்ச்சல் மற்றும் உடல் வலி போன்ற நிலைமைகளும் காணப்படுகின்றன. இவை சாதாரணமானவை என்று தொற்றுநோய் விஞ்ஞானப் பிரிவினர் தெரிவிக்கின்றனர். எவ்வாறிருப்பினும் இலங்கையில் பதிவான இந்தத் தகவல், ஏனைய நாடுகளுடன் ஒப்பிடும் போது மிகவும் குறைவானது. தடுப்பூசி செலுத்தப்பட்டதன் பின்னர், ஏற்படும் சிக்கல் நிலைமைகள் தொடர்பில் சுகாதாரத்துறை அதிகாரிகள் கவனம் செலுத்த வேண்டும் எனவும் அவர் வலியுறுத்தியுள்ளார். (க-இ)

## ஹெரோய்னுடன் இருவர் கைது!

வவுனியா, மார்ச் 15
வவுனியா குடியிருப்பு சிறுவர் பூங்காவுக்கு அருகில் ஹெரோய்ன் போதைப்பொருளை உடைமையில் வைத்திருந்த குற்றச்சாட்டில் இருவர் பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டனர். இந்தப் பகுதியில் ஹெரோய்ன் விற்பனை இடம்பெறுகின்றது என்று பொலிஸாருக்குக் கிடைக்கப் பெற்ற இரகசியத் தகவலை அடுத்து மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பு நடவடிக்கையின் போது போதைப்பொருள் விற்பனை செய்த நபரையும், அதனைக் கொள்வனவு செய்ய வந்த நபரையும் பொலிஸார் கைதுசெய்தனர். இவர்களிடமிருந்து மில்லி கிராம் அளவிலான ஹெரோய்ன் போதைப்பொருளை பொலிஸார் மீட்டுள்ளனர். கைதானவர்கள் இன்று நீதிமன்றில் முற்படுத்த வுள்ளனர். (ர-110)



## சிறையில் உண்ணாவிரதம்: போராடுகிறார் ராமநாயக்க

கொழும்பு, மார்ச் 15
நாடாளுமன்ற உறுப்பினர் ரஞ்சன் ராமநாயக்க அங்குனுகொலபெலஸ்ஸ சிறைச்சாலையில் உண்ணாவிரத போராட்டத்தில் ஈடுபட்டுள்ளார்.
கழிப்பறைக்கு செல்வதற்கு வசதியான சக்ர நாற்காலி வழங்குமாறு அவர் விடுத்த கோரிக்கையை சிறைச்சாலை அதிகாரிகள் நிராகரித்துள்ளனர். இதன் காரணமாகவே அவர் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளார்.
கடுமையான முழங்கால் வலி நீண்ட காலமாக உள்ளமையால் சாதாரண கழிப்பறையில் தன்னால் அமர முடியவில்லை என அவர் குறிப்பிட்டுள்ளார். கழிப்பறைக்கு செல்வதற்காக நாற்காலி ஒன்று வழங்குமாறு அவர் கோரிக்கை விடுத்துள்ளார். அதிகாரிகள் பதிலளிக்காமையால் ரஞ்சன் உண்ணாவிரதத்தில் ஈடுபட்டுள்ளார். இரவு உணவு மற்றும் காலை உணவு பெற்றுக் கொள்ளாமல் இருந்தமையால் அதிகாரிகள் அவருக்கு நாற்காலி வழங்க நடவடிக்கை எடுத்துள்ளனர். பின்னர் அதனை எடுத்துச் சென்றுள்ளனர் எனவும் அதனை மீளவும் வழங்கவில்லை என்றும் தெரியவந்துள்ளது. (ஓ.இ)

## இலங்கையில் 23,000 பெண்கள் மாயம்!

கொழும்பு, மார்ச் 15
இலங்கையில் கடந்த ஐந்து வருட காலப் பகுதியில் 23 ஆயிரத்து 204 பெண்கள் காணாமல் போயுள்ளனர். இது தொடர்பில் பொலிஸாருக்கு முறைப்பாடுகள் கிடைத்துள்ளன எனவும் தெரியவருகின்றது. அண்மையில் கொழும்பு டாம் வீதியில் கண்டுபிடிக்கப்பட்ட தலையற்ற பெண் தொடர்பில் நடத்தப்பட்ட விசாரணையின் ஆரம்பத்தில் பொலிஸார் குறித்த உடலை அடையாளம் காண்பதற்கு பொதுமக்களை நாடியிருந்தனர். அந்தச் சந்தர்ப்பத்தில் சுமார் 200 க்கும் அதிகமான அழைப்புக்கள் உள்நாடு மற்றும், வெளிநாடுகளில் இருந்து பொலிஸாருக்கு கிடைத் துள்ளமை தெரியவந் துள்ளது. இந்த நிலையில் பொலிஸாரின் பதிவுகளில் குறிப்பாக 2015 ஆம் ஆண்டு முதல் 2020 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதிக்குள் நாட்டில் 23 ஆயிரத்து 204 பெண்கள் காணாமல் போயுள்ளமை பற்றிய முறைப்பாடுகள் கிடைத்துள்ளன. (ர-இ)

## புதிய அரசமைப்பு உருவான பின்னர் தேர்தல் நடத்தலாம்

அமைச்சர் சரத் வீரசேகர தெரிவிப்பு



கொழும்பு,மார்ச் 15
புதிய யாப்பு தயாரிக்கப்பட்டு வருகிறது. அந்த யாப்பின் பிரகாரம் மத்திய அரசுக்கு கூடுதல் அதிகாரங்களை வழங்கி, அதன் பின்னரே மாகாண சபைத் தேர்தலை நடத்துவது சிறப்பாக இருக்கும் என்று பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் சரத் வீரசேகர தெரிவித்தார். கொழும்பில் நேற்று முன்தினம் நடைபெற்ற நிகழ்வொன்றில் பங்கேற்றதன் பின்னர், ஊடகங்களுக்குக் கருத்துரைக்கும் போதே, அவர் இதனைத் தெரிவித்தார்.
மாகாண சபைத் தேர்தலை நடத்துவதற்கான தீர்மானம் இதுவரை எடுக்கப்படவில்லை. யாப்பின் பின்னர் தீர்மானம் எடுக்கப்படும் என்றும் அவர் தெரிவித்தார். (க-இ)

## 2030ஆம் ஆண்டுவரை கோத்தாவின் ஆட்சியாம்

இராஜாங்க அமைச்சர் ஷெஹான் சேமசிங்க தெரிவிப்பு

கொழும்பு, மார்ச் 15
ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ச மேலும் எட்டரை ஆண்டுகள் நாட்டை ஆள முடியும். இதனால் சிறிலங்கா பொதுஜன பெரமுனவின் அடுத்த ஜனாதிபதித் தேர்தல் வேட்பாளர் குறித்து 2030இல் தீர்மானிக்க முடியும் என இராஜாங்க அமைச்சர் ஷெஹான் சே மசிங்க தெரிவித்துள்ளார். எங்களுக்கு நிறைய தலைவர்கள் உள்ளனர். அப்போது நாங்கள் முடிவு செய்வோம். கோத்தாபய ராஜபக்ச தனது பதவிக் காலத்தின் ஒன்றரை ஆண்டுகளை நிறைவு செய்துள்ளார். அவரின் 10 வருட பதவிக் காலத்தின் ஒன்றரை வருடங்களே இதுவரை கழிந்துள்ளன. நாங்கள் வகுத்த திட்டத்தின் படி நாங்கள் 2030 ஆம் ஆண்டின் பின்னர் எமது அடுத்த ஜனாதிபதி வேட்பாளர் யார் என்பதை பற்றி தீர்மானிப்போம் என அவர் மேலும் தெரிவித்தார். (வ-இ)

## சட்ட விரோத மணல் அகழ்வு: சுற்றிவளைப்பில் 17 பேர் கைது!

கிளிநொச்சி, மார்ச் 15
கிளிநொச்சி பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதிகளில் சட்ட விரோத மணல் அகழ்வைக் கட்டுப்படுத்தும் நோக்கில் நேற்று முன்தினம் தொடக்கம் நேற்று வரை மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பின் போது 8 உழவு இயந்திரங்களும், 9 டிப்பர்களும் பொலிஸாரால் கைப்பற்றப்பட்டுள்ளமையுடன் அவற்றின் சாரதிகள் 17 பேரும் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.
கிளிநொச்சிப் பொலிஸாருக்குக் கிடைக்கப்பெற்ற தகவலுக்கமைய ஊரியான், முரசுமோட்டை, உமையாள்புரம், உருத்திரபுரம் மற்றும் திருவையாறு ஆகிய பகுதிகளில் இந்தச் சுற்றிவளைப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன.
இதன்போது கைது செய்யப்பட்டவர்கள் பொலிஸ் விசாரணைகளின் பின்னர் பிணையில் விடுவிக்கப்பட்டனர். (ர-113)

## விமலையும் உடன் விசாரியுங்கள்!

அரசை நெருக்குகிறார் ரிஷாத்

கொழும்பு,மார்ச் 15
அமைச்சர் விமல் வீரவன்சவிடம் விசாரணை நடத்தப்பட வேண்டும் என்று நாடாளுமன்ற உறுப்பினர் ரிஷாத் பதியுதீன் வலியுறுத்தியுள்ளார். நாடாளுமன்ற உறுப்பினர் அசோக் அபேசிங்கவுக்கு எதிராக முன்வைக்கப்பட்ட முறைப்பாடு தொடர்பில், குற்றப் புலனாய்வுத் திணைக்களம் துரித விசாரணை மேற்கொண்டது. அதேபோன்று விமல் வீரவன்சவுக்கு எதிராக பதிவு செய்யப்பட்டுள்ள முறைப்பாட்டையும் உடன் விசாரணைக்கு எடுக்க வேண்டும் என்று தனது டுவிற்றரில் பதிவிட்டுள்ளார். உயிர்த்த ஞாயிறுத் தாக்குதலில் ரிஷாத் தொடர்புபட்டுள்ளார். அதற்கான சாட்சி தன்னிடம் உள்ளது என்று விமல் வீரவன்ச குற்றச்சாட்டு முன்வைத்திருந்தார்.
இந்தச் சந்தர்ப்பத்தில் அமைச்சர் விமலுக்கு எதிராக குற்றப் புலனாய்வுப் பிரி



வில் முறைப்பாடு செய்துள்ளேன். அவரையும் விசாரணைக்கு அழைக்க வேண்டும் என்று ரிஷாத் தனது பதிவில் குறிப்பிட்டுள்ளார். (க-இ)

# இந்தியாவுக்காக சீனாவை ஒருபோதும் கைவிடோம்

## வெளிவிவகார செயலாளர் உறுதி

**கொழும்பு,மார்ச் 15**

**நாட்டின் அபிவிருத்திக்காக சீனாவைப் பயன்படுத்த வேண்டியது தவிர்க்க முடியாது. அதற்காக அயல்நாடான இந்தியாவின் தேசிய பாதுகாப்பு உள்ளிட்ட விடயங்களைப் புறமொதுக்குகின்றோம் எனக் கருத முடியாது. அதேவேளை இலங்கையின் துறைமுகங்கள் மற்றும் கரையோரப் பகுதிகள் எந்தவொரு சந்தர்ப்பத்திலும் வெளிநாட்டுப் படைகளின் பயன்பாட்டுக்கு வழங்கப்படமாட்டாது.**

இவ்வாறு வெளிவிவகார செயலாளர் அட்மிரல் ஜயநாத் கொலம்பகே தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது,

இந்தியாவின் தலையீட்டின் காரணமாகவே 13 ஆவது திருத்தச்சட்டம் கொண்டுவரப்பட்டது. இதன்மூலம் வன்முறையை நிறுத்துவதற்கும், மாகாணங்களை முன்னேற்றுவதற்கும் முடியும் என்றே இந்தியா கருதியது. துரதிஷ்டவசமாக அந்த இலக்குகள் அடையப்படவில்லை. பின்னர் அரசின் முயற்சியால் தான் அந்த இலக்குகள் அடையப்பட்டன.

மாகாணங்களுக்கு அனைத்து அதிகாரங்களையும் அரசால் வழங்க முடியாது. ஆனால் அதிகாரங்கள் மறுசீரமைக்கப்பட்டு மாகாண சபைகள் வினைத்திறனாகச் செயற்படுவதற்கான வழிகளை ஏற்படுத்திக் கொடுக்க வேண்டும். தற்போதைய அரசமைப்பானது 20 தடவைகள் திருத்தப்பட்டு விட்டது. ஆகவே புதிய அரசமைப்பொன்று அவசியம். மீண்டும் இனங்களுக்கு இடையில் முரண்பாடுகள் ஏற்படாத வகையில் அது அமைய வேண்டும்.

இந்தியாவுக்கான இலங்கைத் தூதுவராகப் பரிந்துரைக்கப்பட்டுள்ள மிலிந்த மொரகொடவின் நியமனத்தை இந்தியா ஏற்றுள்ளது. மிக விரைவில் அவர் டில்லிக்குச் சென்று பதவிகளைப் பொறுப்பேற்பார்.

இலங்கையைப் பொறுத்தவரையில் அடுத்த நூற்றாண்டில் கடல் போக்குவரத்து மற்றும் வர்த்தகமே பிரதான வருமான வாயிலாக இருக்கப்போகின்றது. அவ்வாறான நிலையில் சீனாவின் ஒரே பட்டி ஒரே பாதை முன்முயற்சித் திட்டத்தைப் புறமொதுக்கி விட முடியாது. அதில் பங்குதாரராக இருக்க வேண்டியது கட்டாயமாகின்றது. என்றார். (க-இ)

# சீனி மோசடியால் நாட்டுக்கு பெருமிழப்பு

## எதிர்க்கட்சித் தலைவர் சுட்டிக்காட்டு




கொழும்பு,மார்ச் 15

சீனி இறக்குமதி மோசடி காரணமாக, நாட்டுக்கு 15.9 பில்லியன் ரூபா நட்டம் ஏற்பட்டுள்ளது. இது நாட்டுக்கு ஏற்பட்டுள்ள பெரும் நிதியிழப்பு. இதற்கு நேரடியாக அரசு பொறுப்புக் கூற வேண்டும். இவ்வாறு எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்தார்.

மேலும், தமது நண்பர்களை மகிழ்விப்பதற்காகவே, அரசு மிகப்பெரிய சீனி வரி மோசடியில் ஈடுபட்டுள்ளது. இந்த நிதியில் கொவிட் தடுப்புப் பணிகளில் ஈடுபட்டுள்ள சுகாதார பணியாளர்களுக்கும், பாதுகாப்பு தரப்பினருக்கும், எவ்வளவு பாதுகாப்பு உபகரணங்களைப் பெற்றுக் கொடுத்திருக்கலாம்?என்றும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார். (க-இ)

# துறைமுகங்களை விரிவுபடுத்தவும்

## இந்தியாவிடம் கூட்டமைப்பு கோரிக்கை

திருமலை,மார்ச் 15

மட்டக்களப்பு, அம்பாறை, மன்னார் மற்றும் காங்கேசன்துறை போன்ற இடங்களில் துறைமுகங்களை உருவாக்குவதன் மூலம், இலங்கை - இந்திய சுதந்திர வர்த்தக ஒப்பந்தத்தின் அடிப்படையில், இங்குள்ள உள்ளூர் உற்பத்தி பொருள்களின் ஏற்றுமதியை அதிகரிக்க முடியும்.

இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் இரா.சாணக்கியன் கோரிக்கை விடுத்தார்.

இந்தியத் தூதுவருடனான சந்திப்பில் அவர் இந்தக் கோரிக்கையை விடுத்தார்.

இதேவேளை, எமது பொருளாதாரத்தைக் கட்டியெழுப்பும் விதமாக, தகவல் தொழில்நுட்பத் துறையை வடக்கு, கிழக்கில் நிறுவுவதற்கான பரிந்துரையும் சாணக்கியன் முன்வைத்தார்.

அத்துடன் மட்டக்களப்பு விமான நிலையத்தை சர்வதேச விமான நிலையமாக மாற்றுவதற்கான நடவடிக்கைகளை எடுக்க இந்தியா அழுத்தம் கொடுக்க வேண்டும். உள்ளூர் பயண சேவைகளை இதன் மூலம் உருவாக்கலாம். இதன் மூலம் பல தொழில் வாய்ப்புக்களை உருவாக்கலாம் எனவும் அவர் சுட்டிக்காட்டினார். (க-இ)

# வெளிநாட்டமைச்சு அலுவலகம் திருகோணமலையிலும் திறப்பு

திருமலை,மார்ச் 15

வெளிநாட்டமைச்சின் பிராந்திய கொன்சியூலர் அலுவலகம், திருகோணமலை உட்துறைமுக வீதியில் உள்ள கிழக்கு மாகாண முதலமைச்சர் வளாகத்தில் நேற்று முன்தினம் திறக்கப்பட்டது.

வெளிநாட்டமைச்சர் தினேஷ் குணவர்தன மற்றும் அமைச்சின் செயலாளர் அட்மிரல் பேராசிரியர் ஜயநாத் கொலம்பகே ஆகியோர் இவ் அலுவலகத்தைத் இணைந்து திறந்து வைத்தனர்.

கிழக்கு மாகாணம் மற்றும் அதனை அண்மித்த பகுதிகளிலுள்ள பொதுமக்கள் கொழும்பிலுள்ள வெளிநாட்டமைச்சின் கொன்சியூலர் விவகாரப் பிரிவுக்குச் செல்லாமல், இங்கேயே சேவைகளைப் பெற்றுக்கொள்ள முடியும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (க)

# இனப்பிரச்சினைகளை தோற்றுவிக்க முயற்சி

## முறியடிக்கக் கோருகிறார் முஷாரப்

கொழும்பு,மார்ச் 15

உள்நாட்டுப் போர் முடிவுறுத்தப்பட்ட அமைதியான இலங்கையை வளர்ச்சிப் பாதையில் நகர்த்திச் செல்ல வேண்டிய தருணத்தில், பிரஜைகளிடையேயான சகவாழ்வைச் சிதைப்பதன் மூலம், மீண்டும் இனப்பிரச்சினைகளைத் தக்க வைப்பதற்கான சதிமுயற்சிகள் முன்னெடுக்கப்படுகின்றன. அரசு அவற்றை இனங்கண்டு உடனடியாக முறியடிக்க வேண்டும்.

இவ்வாறு எதிர்க்கட்சியைச் சேர்ந்த அகில இலங்கை மக்கள் காங்கிரஸின் நாடாளுமன்ற உறுப்பினர் எஸ்.எம். முஷாரப் தெரிவித்தார்.

உயிர்த்த ஞாயிறுத் தாக்குதல் தொடர்பில் விசாரணைகளை முன்னெடுத்த ஜனாதிபதி ஆணைக்குழுவின் அறிக்கை மீதான சபை ஒத்திவைப்பு வேளை பிரேரணை விவாதத்தில், அவர் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது,

உலகம் முழுவதிலும் இஸ்லாம் போபியா என்ற போர்வையில் முஸ்லிம்கள் தாக்கப்பட்டுக் கொண்டு வருகின்றனர். அதுபோன்று இலங்கையிலும் இந்தத் தாக்குதலை ஒத்த ஒரு நாடகம் அரங்கேறியிருக்கிறது. அதனை முஸ்லிம்கள் மீது குறிவைத்துத் தாக்கப்படும் பழிவாங்கல் செயற்பாடாகப் பார்க்கிறோம்.

ஜனாதிபதி ஆணைக்குழு அறிக்கையில் பொறுப்புக்கூற வேண்டியவராக பெயர் குறிப்பிடப்பட்டுள்ள முன்னாள் ஜனாதிபதி, பதில் பாதுகாப்பு அமைச்சரை நியமிக்காமல் அந்தக் காலப்பகுதியில் சிங்கப்பூர் மற்றும் இந்தியா சென்றிருக்கிறார்.

இந்தத் தாக்குதலின் உண்மையான சூத்திரதாரி யார் என்பதை அரசு இந்த உலகுக்குத் தெரியப்படுத்த வேண்டும். ஏனெனில் இந்த சதித்திட்டம் முஸ்லிம்கள் பற்றிய புரிதலை ஏனைய இனங்களிடையே பிழையாக தோற்றுவித்து, நாட்டில் இனங்களிடையேயான விரிசலை மேலும் வளர்க்கிறது.

சதித்திட்டங்களைத் தகர்த்து இனங்களிடையேயான புரிந்துணர்வையும், சகவாழ்வையும் கட்டியெழுப்பும் பொறிமுறைகளின் மீது அரசு மிகவும் கரிசனையுடன் கருமமாற்ற வேண்டும். என்றார். (க-319)

# புனர்வாழ்வளிப்பு காலத்தை நீதிமன்றமே தீர்மானிக்கும்

## வர்த்தமானியில் சுட்டிக்காட்டு

கொழும்பு,மார்ச் 15

அடிப்படைவாதச் செயற்பாடுகள் தொடர்பாக சரணடையும் அல்லது கைதுசெய்யப்படும் நபர்கள், குற்றமிழைத்துள்ளமை உறுதியாகும் பட்சத்தில், சட்ட நடவடிக்கை எடுப்பதற்கு அவர்களை நீதிமன்றில் முற்படுத்த வேண்டும்.

இவ்வாறு புனர்வாழ்வளிக்கும் சட்ட விதிகள் உள்ளடக்கப்பட்ட அதிவிசேட வர்த்தமானி அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ளது.

பொலிஸ் அதிகாரியல்லாத எவரேனும் ஒருவரிடம் சரணடையும் நபர், 24 மணித்தியாலங்களுக்குள் அண்மையிலுள்ள பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரியிடம் ஒப்படைக்கப்பட வேண்டும்.

பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி விசாரணை நடத்துவதற்காக சட்டமூலத்தின் 9 ஆவது சரத்தின் பிரகாரம், சம்பந்தப்பட்ட நபரை தடுத்து வைத்துக்கொள்ள வேண்டுமா என்பதை பரிசீலிப்பதற்கு, அமைச்சருக்கு அறிக்கை சமர்ப்பிக்க வேண்டும்.

குற்றத்தின் தன்மைக்கு அமைவாக, அந்த நபருக்கு எதிராக வழக்குத் தொடராமல் அவர் மத்திய நிலையத்தில் புனர்வாழ்வு அளிப்பதற்கு தகுதியுடையவரென்பது சட்டமா அதிபரின் நிலைப்பாடாக இருந்தாலும், அவர் நீதவான் முன்னிலையில் முற்படுத்தப்பட வேண்டும்.

அதன்போது அவர் மீதான குற்றச்சாட்டு தொடர்பான விடயங்களை ஆராய்ந்து ஓராண்டுக்கு மேற்படாத காலத்துக்கு புனர்வாழ்வளிக்க உத்தரவிட முடியும்.

புன்வாழ்வளிக்கப்படும் காலம் முடிந்த பின்பு அதன் பெறுபேற்றைப் பரிசீலித்து விடுதலை செய்யவோ அல்லது மேலதிகமாக புனர்வாழ்வளிக்கவோ அல்லது பரிசீலித்துப் பார்க்கவோ வேண்டும்.

அதற்காக புனர்வாழ்வு ஆணையாளர் நாயகம் அமைச்சின் செயலாளருக்கு அறிக்கை சமர்ப்பிக்க வேண்டும்.

நீடிக்கப்படும் புனர்வாழ்வு கால எல்லையின் முடிவில் குறித்த நபர் விடுவிக்கப்பட வேண்டும். இவ்வாறு வர்த்தமானியில் குறிப்பிடப்பட்டுள்ளது. (க-இ)

# ஓ.எம்.பி. அலுவலகத்துக்கு புதிய ஆணையாளர்கள்!

*நீதி அமைச்சு பரிந்துரை*

கொழும்பு, மார்ச் 15
காணாமல் ஆக்கப்பட்டோர் அலுவலகத்துக்குப் புதிய ஆணையாளர்களை நியமிப்பதற்கான பரிந்துரை நீதி அமைச்சால் ஜனாதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. அலுவலகம் நியமிக்கப்பட்டதும் உரியவர்களுக்கு இழப்பீடு வழங்கவும் நடவடிக்கை எடுக்கப்படும்.
இவ்வாறு நீதி அமைச்சர் எம்.யூ.எம். அலி சப்ரி தெரிவித்துள்ளார்.
இணைய ஊடகம் ஒன்றுக்குக் கருத்துத் தெரிவித்தபோதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.
அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது-
கடந்த அரசால் நியமிக்கப்பட்ட காணாமல் ஆக்கப்பட்டோருக்கான அலுவலகத்தின் ஆணையாளர்களின் பதவிக்காலம் கடந்த பெப்ரவரி மாதத்துடன் முடிவடைந்துள்ளது. அதனால் புதிய ஆணையாளர்களை நியமிக்கும் பரிந்துரை நீதி அமைச்சால் ஜனாதிபதிக்கு முன்வைக்கப்பட்டுள்ளது.
தமிழ் முஸ்லிம் ஆணையாளர்களை உள்ளடக்கி அந்தப் பரிந்துரை ஜனாதிபதியிடம் முன்வைக்கப்பட்டுள்ளது. ஜனாதிபதி உரிய நியமனங்களை வழங்குவார்.
காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவினர்களுக்கு இடைக்காலத் தீர்வாக இழப்பீடு வழங்கும் நடவடிக்கை ஆணையாளர்கள் நியமனத்தின் பின்னர் முன்னெடுக்கப்படும் என்றார். (எ-இ)

## சிறைக்கொத்தணி 5,125 ஆக உயர்வு

கொழும்பு, மார்ச் 15
சிறைச்சாலை கொத்தணியில் கொரோனாத் தொற்றாளர்களின் எண்ணிக்கை 5 ஆயிரத்து 125 ஆக உயர்ந்துள்ளது என சிறைச்சாலை திணைக்களம் தெரிவித்துள்ளது. இந்த நிலையில், சிறைகளில் மேலும் 65 சிறைக்கைதிகள் கொரோனாத் தொற்றாளர்களாக அடையாளம் காணப்பட்டுள்ளனர்.
அதன்படி வெலிக்கட சிறைச்சாலையில் 929 பேரும், கொழும்பு மகசின் சிறைச்சாலையில் 881 பேரும், மஹர சிறைச்சாலையில் 836 பேரும், கொழும்பு சிறைச்சாலையில் 458 பேரும், நீர்கொழும்பு சிறைச்சாலையில் 370 பேரும் தொற்றாளர்களாக அடையாளம் காணப்பட்டுள்ளனர் என தெரிவிக்கப்பட்டுள்ளது.
இந்த நிலையில் சிறைச்சாலை கொத்தணியில் கொரோனாத் தொற்றாளர்களாக அடையாளம் காணப்பட்ட 4 ஆயிரத்து 702 கைதிகள் மற்றும் 158 அதிகாரிகள் தற்போது குணமடைந்த நிலையில் மேலும் 250 கைதிகள் மற்றும் 2 அதிகாரிகள் வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகின்றனர் எனவும் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச-இ)

## ஜெயசுந்தரவை நீக்கவேண்டும்

*கோத்தாவை ஆதரித்த ஆனந்த தேரர் கோரிக்கை*

கொழும்பு, மார்ச் 15
இலங்கை முன்னேற வேண்டும் என்றால் ஜனாதிபதியின் செயலர் பி.பி.ஜெயசுந்தரவை நீக்கவேண்டும்.
இவ்வாறு கோத்தாபய ராஜபக்சவின் வெற்றிக்காக பாடுபட்ட நாரஹேன்பிட்ட அபயராம விகாராதிபதி முருத்தெட்டுவே ஆனந்த தேரர் தெரிவித்தார்.
'நாடு இன்று இருக்கும் சூழ்நிலையில் கேள்விகள் கேட்பதற்கு எவரும் இல்லாத நிலையே காணப்படுகின்றது.
இன்று தகுதியற்றவர்கள் நாட்டின் பெரிய பதவிகளில் நாற்காலிகளுக்கு நியமிக்கப்படுகிறார்கள்' என்று அவர் தன் ஆதங்கத்தை வெளிப்படுத்தியுள்ளார். (ஒ-இ)

## அரசநிறுவனங்களில் விசேட சோதனை இன்று முதல் ஆரம்பம்


கொழும்பு, மார்ச் 15
உள்நாட்டு அலுவல்கள் அமைச்சால் அரச நிறுவனங்களை விசேட சோதனைக்கு உட்படுத்தும் வேலைத்திட்டத்தின் முதலாவது கட்டம் இன்று முதல் ஆரம்பமாகவுள்ளது.
அரச நிறுவனங்களில் இடம்பெறும் தவறுகளைக் குறைத்து, பொது மக்களுக்கு செயற்றிறன்மிக்க சேவையைப் பெற்றுக்கொடுக்கும் நோக்கில் இந்த வேலைத்திட்டம் நடைமுறைப்படுத்தப்படவுள்ளது.
இன்று ஆரம்பிக்கப்படும் இந்தத் திட்டம் எதிர்வரும் 19ஆம் திகதி வரை முன்னெடுக்கப்படவுள்ளது.
இந்தப் பரிசோதனை நடவடிக்கைகளுக்காக உள்நாட்டு அலுவல்கள் அமைச்சின் 28 அதிகாரிகள் ஈடுபடுத்தப்படவுள்ளனர் என அந்த அமைச்சு தெரிவித்துள்ளது. (ச-இ)

## ஏப்.21. தாக்குதல் அறிக்கை மேலும் பிரதிகள் கையளிப்பு

கொழும்பு,மார்ச் 15
ஏப்ரல் 21 தாக்குதல் தொடர்பில் ஆராய்வதற்கு, நியமிக்கப்பட்ட ஜனாதிபதி ஆணைக்குழுவின் இறுதி அறிக்கையின், மேலும் 22 பாகங்கள் சட்டமா அதிபரிடம் கையளிக்கப்பட்டன.
ஜனாதிபதியின் சட்டப் பிரிவு பணிப்பாளர் நாயகம், சட்டத்தரணி ஹரிகுப்த சேனாதீர, குறித்த அறிக்கையின் பாகங்களை, சட்டமா அதிபர் தப்புல டி லிவேராவிடம் கையளித்தார்.
ஏப்ரல் 21 தாக்குதல் தொடர்பில் ஆராய்வதற்கு நியமிக்கப்பட்ட ஜனாதிபதி ஆணைக்குழுவின் இறுதி அறிக்கை 87 பாகங்களைக் கொண்டதாகும்.
அதேவேளை அறிக்கையின் 65 பாகங்கள் கடந்த 2 ஆம் திகதி சட்டமா அதிபரிடம் கையளிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (க-இ)

## கொரோனாவால் உயிரிழந்தோரின் 45ஜனாஸாக்கள் இதுவரை அடக்கம்

*இராணுவத் தளபதி தெரிவிப்பு*



கொழும்பு, மார்ச் 15
நாட்டின் பல்வேறு இடங்களிலும் கொரோனாத் தொற்றால் இறப்போரின் ஜனாஸாக்களை அடக்கம் செய்வது தொடர்பாக காணப்பட்ட பிரச்சினைகள் முழுவதுமாக நிவர்த்தி செய்யப்பட்டுள்ளன என இராணுவத் தளபதி ஜெனரல் சவேந்திர சில்வா தெரிவித்துள்ளார்.
இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,
நாட்டில் பல்வேறு பிரதேசங்களில் வைக்கப்பட்டிருந்த 45 கொரோனாத் தொற்றால் உயிரிழந்த ஜனாஸாக்கள் இதுவரையில் அடக்கம் செய்யப்பட்டுள்ளன. இன்னும் ஓரிரண்டு சடலங்கள் உள்ளன.
அவை விரைவில் அடக்கம் செய்யப்படும் என அவர் தெரிவித்தார்.
கொரோனாத் தொற்றால் உயிரிழந்த ஜனாஸாக்களை கிழக்கு மாகாணத்தின் மட்டக்களப்பு மாவட்டத்தின், ஓட்டமாவடி பிரதேசத்தில் அடக்கம் செய்யும் பணிகள் இடம்பெற்று வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (ச-இ)

## நாளாந்த பி.சி.ஆர் சோதனை குறைவடைந்து வருகின்றது

*நாட்டுக்கு ஆபத்து என்கின்றனர் தொழில்நுட்ப வல்லுநர்கள்*



கொழும்பு, மார்ச் 15
இலங்கையில் நாளாந்தம் மேற்கொள்ளும்பி.சி.ஆர். பரிசோதனை களின் எண்ணிக்கை குறைவடைந்து வருகின்றமை ஆபத்தான பிரச்சினையாகும் என்று இலங்கை அரச மருத்துவ ஆய்வக தொழில்நுட்ப வல்லுநர்கள் சங்கத்தின் தலைவர் ரவி குமுதேஷ் தெரிவித்துள்ளார்.
நேற்றுமுன்தினம் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.
அவர் மேலும் தெரிவித்ததாவது,
நாட்டில் 21 நிலையங்களில் பி.சி.ஆர்.பரிசோதனைகள் மேற்கொள்ளப்படுகின்ற வசதிகள் காணப்படுகின்றன. அத்துடன் பி.சி.ஆர். இயந்திரங்களுக்கும் எந்த சேதமும் ஏற்படவில்லை. இருப்பினும் பி.சி.ஆர் பரிசோதனைகளின் எண்ணிக்கை குறைவாகக் காணப்படுகின்றது.
கொரோனாத் தொற்று கட்டுப்பாட்டில் உள்ளது என தொற்று நோயியல் பிரிவு தெரிவித்தாலும், அதில் எந்த உண்மையும் இல்லை என்றார். (ற-இ)

## மக்கள் கோரினால் வெளியேறுமாம் சு.க.



கொழும்பு, மார்ச் 15
அரசிலிருந்து வெளியேறுமாறு மக்கள் கோரிக்கை விடுப்பார்களாயின் அதனைச் செய்வதற்கு சிறிலங்கா சுதந்திரக் கட்சி தயாராகவே இருக்கின்றது. இவ்வாறு அந்தக் கட்சியின் மூத்த உறுப்பினரும் அமைச்சருமான மஹிந்த அமவீர தெரிவித்தார்.
அவர் மேலும் தெரிவித்ததாவது:
கடந்த பொதுத் தேர்தலின்போது சிறிலங்கா சுதந்திரக் கட்சியைத் தோற்கடிப்பதற்கு திட்டம் வகுத்தனர். சிலர் கழுகு என்று கூட எம்மையும் எமது கட்சியையும் விமர்சித்தனர்.
இனிமேல் கிராம மக்கள் வழங்கும் தீர்ப்பின் கோரிக்கையின் பிரகாரமே எமது தீர்மானம் அமையும்.
பதவிகளைத் துறக்குமாறோ அல்லது வெளியேறுமாறோ மக்கள் கோரிக்கை விடுப்பார்களாயின் அதனை ஏற்று செயற்படுவோம், என்றார். (ஓ-44)

## கொரோனாவால் முடங்கியது கொழும்பின் மொரவக்க நகர்




கொழும்பு, மார்ச் 15
கொரோனாத் தொற்றுப் பரவல் அச்சம் காரணமாக, கொழும்பு மொரவக்க நகரின் விற்பனை நிலையங்களை மூடுவதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளது என்று பிடபெத்தர பிரதேச சபை தெரிவித்துள்ளது.
மொரவக்க சுகாதார மருத்துவ அதிகாரிகள் அலுவலகத்தால் மேற்கொள்ளப்பட்ட பி.சி.ஆர். பரிசோதனையில் நேற்றுமுன்தினம் 51 பேருக்கு கொவிட் 19 தொற்று உறுதிப்படுத்தப்பட்டதைத் தொடர்ந்து இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்பட்டது. (த-இ)

### சாவகச்சேரி நகர, பிரதேச சபை அசமந்தம்

# மலக்கழிவுகளை அகற்ற உதவிக்கு வந்தது படை

சாவகச்சேரி, மார்ச் 15

**தென்மராட்சிப் பிரதேசத்தில் மலக்கழிவுகள் அகற்றும் சேவையை குறைந்த கட்டணத்தில் 52ஆவது படையினர் மக்களுக்கு வழங்கவுள்ளனர் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.**

தென்மராட்சி பிரதேசத்தில் சாவகச்சேரி நகரசபை மற்றும் பிரதேச சபை என இரு சபைகள் உள்ள போதிலும், மலக்கழிவுகளை அகற்றும் மக்களுக்கான சேவையில் சபையினர் அக்கறையில்லா நிலையில் உள்ளனர். சாவகச்சேரி பிரதேச சபையிடம் இதற்கான கட்டடமும் இயந்திரமும் இருந்தும், அவை பயன்படுத்தப்படாமல் உள்ளன. சாவகச்சேரி நகர சபையால் கண்ணாடிப்பிட்டி பகுதியில் இதற்கான திட்டம் ஆரம்பிக்கப்பட்டு இடை நிறுத்தப்பட்டுள்ளது. கடந்த ஐந்து வருடங்களாக மக்கள் தமது காணிகளில் உள்ள மலக்கூடக் கழிவுகளை அப்புறப்படுத்த சிரமங்களை எதிர்நோக்கும் நிலையில் அவர்கள் தற்போது யாழ்ப்பாணத்தில் இயங்கும் தனியார் நிறுவனத்துக்கு அதிக கட்டணம் செலுத்தி இந்த சேவையைப் பெற்று வருகின்றனர்.

இந்தநிலையில் பிரதேசத்தில் உள்ள 52ஆவது படையணியினரிடம் மக்கள் முன்வைத்த கோரிக்கையை அடுத்து, குறைந்த கட்டணத்தில் இந்தச் சேவையை வழங்குவதற்கான ஏற்பாடுகளை படையினர் மேற்கொண்டுள்ளனர். இதற்காக படையினர் எழுதுமட்டுவாழ் பகுதியில், கட்டடம் அமைத்து சேவையை வழங்கவுள்ளனர் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (வ-9)


## அனுமதியின்றி மணல் அகழ்ந்த நால்வர் கைது



கிளிநொச்சி, மார்ச் 15

தருமபுரம் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பெரிய குளம் பகுதியில் அனுமதிப்பத்திரமின்றி மணல் அகழ்ந்த மூன்று உழவு இயந்திரங்களும், ஒரு டிப்பர் வாகனமும் பொலிஸாரால் பறிமுதல் செய்யப்பட்டதுடன், அதன் சாரதிகளும் நேற்றுமுன்தினம் கைதுசெய்யப்பட்டுள்ளனர். தருமபுரம் பொலிஸாருக்குக் கிடைக்கப்பெற்ற தகவலுக்கமைய இந்தக் கைது நடவடிக்கை இடம்பெற்றுள்ளது.

இவ்வாறு கைது செய்யப்பட்டவர்கள் பொலிஸ் விசாரணைகளின் பின்னர் பிணையில் விடுவிக்கப்பட்டனர் என்று தருமபுரம் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி கின்சிலி கேரத் தெரிவித்தார். (ரு-113)



## கிராமியப் பாலத்துக்கு அடிக்கல் நடுகை

வவுனியா,மார்ச் 15

'சுபீட்சத்தின் நோக்கு' என்ற அரசின் வேலைத்திட்டத்துக்கு அமைய வவுனியா வடக்கு பகுதியில் சாண்டாகுளம் மற்றும் வினாசிக்குளம் பகுதிகள் இடையே பாலம் அமைப்பதற்கான அடிக்கல் நடும் நிகழ்வு நேற்று முன்தினம் நடைபெற்றது.

நிகழ்வில் முதன்மை விருந்தினராக கலந்துகொண்ட நாடாளுமன்ற உறுப்பினர் காதர் மஸ்தான் பாலத்துக்கான அடிக்கல்லை நட்டு நிகழ்வை ஆரம்பித்தார். குறித்த பாலம் சுமார் 20 மில்லியனுக்கும் அதிகமான தொகையில் அமைக்கப்படவுள்ளது. இந்தப் பாலத்தினூடாக 50 க்கு மேற்பட்ட கிராம மக்கள் நன்மையடைவர். நிகழ்வில் வவுனியா வடக்கு பிரதேசசபைத் தலைவர் இ.தணிகாசலம், வீதி அபிவிருத்தி அதிகாரசபையின் மாகாணப் பணிப்பாளர் குருஸ், வவுனியா வடக்கு உதவிப் பிரதேச செயலாளர் தர்மேந்திரா மற்றும் பிரதேச சபை உறுப்பினர்களான பார்த்தீபன், சுதா, பொதுமக்கள் உட்பட பலர் கலந்துகொண்டனர். (ஜ-110)

## சிறப்புத் தேவையுடைய பெண்களின் மகளிர் தின நிகழ்வுகள் வவுனியாவில்




வவுனியா, மார்ச் 15

வவுனியாவில் செவிப்புலன் இழந்தோர் மகளிர் நிறுவனத்தின் ஏற்பாட்டில் மகளிர் தின நிகழ்வுகள் நிறுவனத்தின் தலைவர் திருமதி வ.கோமவாசினி தலைமையில் வவுனியா நகரசபை மண்டபத்தில் நேற்றுமுன்தினம் இடம்பெற்றன.

இதன்போது செவிப்புலனிழந்த மாணவர்களின் இசையும் அசைவும் நிகழ்வும், பல்வேறு விளையாட்டு நிகழ்வுகளும் இடம்பெற்றன. நிகழ்வில் சமூக சேவை உத்தியோகத்தர் எஸ்.எஸ்.வாசன், வவுனியா தெற்கு தமிழ் பிரதேச சபை செயலாளர் திருமதி சுகந்தி கிசோர், தமிழ் விருட்சம் சமூக ஆர்வலர் அமைப்பின் தலைவர் செ.சந்திரகுமார், திருகோணமலை மகளிர் அமைப்பின் தலைவி திருமதி ந.சலோமி, பிரதேச செயலக மகளிர் அபிவிருத்தி உத்தியோகத்தர் திருமதி சி.சுபாசினி உள்ளிட்ட பலரும் கலந்து கொண்டனர். (வ-18)

## சுய தனிமையிலுள்ள குடும்பங்களுக்கு உலர் உணவுப் பொதிகள்

மன்னார், மார்ச் 15

மன்னார் பிரதேச செயலாளர் பிரிவில் கொரோனாவால் சுய தனிமைப்படுத்தப்பட்ட குடும்பங்களுக்கு உலர் உணவு வழங்கும் திட்டம் தொடர்ச்சியாக முன்னெடுக்கப்பட்டு வருகிறது என மன்னார் பிரதேச செயலாளர் எம்.பிரதீப் தெரிவித்தார்.

மன்னார் பொதுச் சுகாதார மருத்துவ அதிகாரி பணிமனையால் வீடுகளில் சுய தனிமைப்படுத்தப்படுபவர்களின் தேவைகள் தொடர்பாக உரிய கிராம அலுவலர்களால் உறுதிப்படுத்தப்பட்டு, அவர்களின் வீடுகளுக்கு கிராம அலுவலர்களால் உலர் உணவுப் பொதிகள் விநியோகிக்கப்படுகின்றன.

இந்த வருடத்தில் இதுவரை 210 குடும்பங்களுக்கு உலருணவுப் பொதிகள் வழங்கப்பட்டுள்ளன. தற்போது சுயதனிமைப்படுத்தலில் உள்ளவர்களுக்கு உலர் உணவுப் பொருள்கள் கிடைக்காது இருப்பின், அவர்கள் கிராம அலுவலர்களுடன் தொலைபேசி மூலம் தொடர்பு கொள்ள முடியும்.

மேலதிக தொடர்புகள் அல்லது முறைப்பாடுகள் இருப்பின் 0232222238 என்ற தொலைபேசி இலக்கம் ஊடாக மன்னார் பிரதேச செயலகத்துடன் தொடர்புகொள்ள முடியும் என அவர் மேலும் தெரிவித்தார். (வ-56)

## திருடப்பட்ட 21 சைக்கிள்கள் பொலிஸாரால் மீட்பு!

பருத்தித்துறை, மார்ச் 15

பருத்தித்துறையில் சைக்கிள் திருட்டில் ஈடுபட்டு வந்த இளைஞர் ஒருவர் கைதுசெய்யப்பட்டுள்ளார். இவரிடமிருந்து 21 சைக்கிள்களை பொலிஸார் மீட்டுள்ளனர்.

இவ்வாறு மீட்கப்பட்ட சைக்கிள்கள் பருத்தித்துறை பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளன.

பருத்தித்துறை சிவன் கோயிலுக்கு அண்மையில் கடந்த புதன்கிழமை இந்த நபர் நடமாடிய போது சந்தேகத்தின் அடிப்படையில் அவர் கைதுசெய்யப்பட்டு விசாரணைக்குட்படுத்தியபோதே, குறித்தநபர் சைக்கிள்கள் திருடியமை தெரியவந்துள்ளது என்று பொலிஸார் தெரிவித்தனர்.

சைக்கிள்கள் திருடப்பட்டிருந்தால் உரியவர்கள் அதனை அடையாளம் காட்டி பெற்றுக்கொள்ள முடியும் என்று பருத்தித்துறை பொலிஸார் தெரிவித்துள்ளனர். (ரு-26)



புதுக்குடியிருப்பு சிவநகர் இளைஞர் கழகத்தால் வளர்சிகனின் நினைவாக முன்னெடுக்கப்பட்ட குருதிக் கொடை முகாம் சிவநகர் இளைஞர் கழகத் தலைவர் க.சுஜிவன் தலைமையில் நேற்று முன்தினம் நடைபெற்றது. (ச-222)

## 16 பேருக்கு நேற்று பி.சி.ஆர் சோதனை

சாவகச்சேரி மார்ச், 15

சாவகச்சேரி சுகாதார மருத்துவ அதிகாரி பணியகப் பிரிவுக்குட்பட்ட 6 குடும்பங்களைச் சேர்ந்த 16 பேருக்கு எழுமாறான பி.சி.ஆர். பரிசோதனைகள் நேற்று முன்தினம் மேற்கொள்ளப்பட்டன., மிருசுவில் தவசிகுளத்தைச் சேர்ந்த இலங்கை போக்குவரத்து சபை அலுவலருக்குத் தொற்று உறுதிப்படுத்தப்பட்டதை




யடுத்து அவரின் குடும்பம் உட்பட மூன்று குடும்பங்களும் கொடிகாமத்தில் ஒரு குடும்பமும் தனிமைப்படுத்தப்பட்டன. அதேபோல கிளிநொச்சி மாவட்டச் செயலகத்தில் கடமையாற்றும் பெண் அலுவலருக்குத் தொற்று உறுதிப்படுத்தப்பட்டதையடுத்து, கைதடியில் உள்ள இரு குடும்பங்கள் தனிமைப்படுத்தப்பட்டன. இந்தக் குடும்பங்களைச் சேர்ந்த 16 பேருக்கே நேற்று முன்தினம் பி.சி.ஆர். பரிசோதனை மேற்கொள்ளப்பட்டு ஆய்வுக்காக அனுப்பி வைக்கப்படடுள்ளன. (வ-9)

## 88 ஆயிரத்தை அண்மித்தது தொற்றாளர் எண்ணிக்கை

கொழும்பு, மார்ச் 15
நாட்டில் கொரோனாத் தொற்றுக்குள்ளானவர்களின் எண்ணிக்கை 88 ஆயிரத்தை அண்மித்துள்ளது.
நேற்று மாலை ஞாயிற்றுக்கிழமை 7.30 வரையில் புதிய தொற்றாளர்கள் 142 பேர் இனங்காணப்பட்டுள்ளனர். அதையடுத்து மொத்தத் தொற்றாளர்களின் எண்ணிக்கை 87 ஆயிரத்து 742 ஆக அதிகரித்துள்ளது.
இனங்காணப்பட்ட மொத்தத் தொற்றாளர்களில் 84 ஆயிரத்து 648 பேர் குணமடைந்துள்ளனர். 2 ஆயிரத்து 568 பேர் தொடர்ந்தும் சிகிச்சை பெற்றுவருகின்றனர். (எ-இ)


## மரண அறிவித்தல்

### அம்பலவாணர் பரமேஸ்வரன்



(ஓய்வுபெற்ற கணக்காளர் - காங்கேசன்துறை சீமெந்துக் கூட்டுத்தாபனம்)

தோற்றம் 31.08.1939 மறைவு 14.03.2021

துன்னாலையைப் பிறப்பிடமாகவும் சுன்னாகத்தை வதிவிடமாகவும் கொண்ட அம்பலவாணர் பரமேஸ்வரன் நேற்று (14.03.2021) ஞாயிற்றுக் கிழமை காலமானார்.
அன்னார் காலஞ்சென்ற அம்பலவாணர் சின்னத்தங்கம் தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்ற சுப்பிரமணியம் தெய்வநாயகி தம்பதியரின் அன்பு மருமகனும், தேவராணியின் அன்புக் கணவரும், வனிதா (ஆசிரியர் - உடுவில் மகளிர் கல்லூரி), பிரபா (அவுஸ்திரேலியா), ஜெகன் (லண்டன்) ஆகியோரின் அன்புத் தகப்பனாரும், சசிகுமார் (பிரதேச செயலகம், உடுவில்), சரதன் (அவுஸ்திரேலியா) ஆகியோரின் மாமனாரும், ஆருஜன் (மாணவன்- சென் ஜோன்ஸ் கல்லூரி), சாருணி, ஹய்சினி (அவுஸ்திரேலியா) ஆகியோரின் அன்புப் பேரனும், நகுலேஸ்வரி (லண்டன்) ஞானேஸ்வரி (கொழும்பு) ஆகியோரின் அன்புச் சகோதரனும் காலஞ்சென்ற சிறிஸ்கந்தராஜா, பாலேந்திரன் மற்றும் சிவசுப்பிரமணியம் ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.
அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (15.03.2021) திங்கட்கிழமை மு.ப. 11.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக சுன்னாகம் கொத்தியாலடி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.
இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.


19, கடவைப்புலம்,
சுன்னாகம்.

தகவல்
குடும்பத்தினர்.

ஓம் விராட் விஸ்வப் பிரம்மனே நமஹ

## மரண அறிவித்தல்

தோற்றம் 01 . 02 . 1943



மறைவு 14 . 03 . 2021

### சோமசுந்தரம் மயில்வாகனம் (பத்தர்)

வண்ணார்பண்ணை அரசடி ஒழுங்கையைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட சோமசுந்தரம் மயில்வாகனம் அவர்கள் நேற்று (14.03.2021) ஞாயிற்றுக் கிழமை மாலை இறைவனடி சேர்ந்தார்.
அன்னார் காலஞ்சென்றவர்களான சோமசுந்தரம் இரத்தினம்மா தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான இராசையா சரஸ்வதி தம்பதியரின் அன்பு மருமகனும், காலஞ்சென்ற இராசலச்சுமியின் அன்புக் கணவரும், கிருஸ்ணராஜ் (கண்ணன்), அரவிந்தன் (இலங்கை மின்சார சபை, யாழ் அலுவலகம்), மயூரன் ஆகியோரின் பாசமிகு தந்தையும், காலஞ்சென்றவர்களான கமலாம்பிகை, நடராசா, பாலசுப்பிரமணியம், தேவிகாராணி ஆகியோரின் பாசமிகு சகோதரனும், காலஞ்சென்றவர்களான நவரத்தினம், நாகேஸ்வரி மற்றும் சோதிலிங்கம் காலஞ்சென்றவர்களான விஜயலச்சுமி, ஜெயலச்சுமி மற்றும் பராசக்தி, செல்வராசா (இந்தியா) ஆகியோரின் மைத்துனரும் சுமதி, நிவோஜா ஆகியோரின் மாமனாரும், அஸ்விதா, அஜிஸ் ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.
அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (15.03.2021) திங்கட்கிழமை மாலை இரண்டு மணியளவில் அவரது இல்லத்தில் இடம்பெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக கோம்பயன்மணல் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.
இந்த அறிவித்தலை உற்றார் உறவினர் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

இல.14, அரசடி ஒழுங்கை,
தட்டாதெரு,
யாழ்ப்பாணம்.

தகவல்:
குடும்பத்தினர்.
077 592 0410, 077 6079 112



## முதலாம் பக்கத் தொடர்ச்சி....

### ஈழத் தமிழர்களின்...

வழக்கில் சிறையிலுள்ள ஏழு தமிழர்கள் விடுதலைக்காக நடவடிக்கை எடுக்கப்படும் என்றும், ஈழத் தமிழர்களுக்கு வாழ்வுரிமையை ஏற்படுத்த நடவடிக்கை எடுக்கப்படும் என்றும், தமிழர்களுக்கு ஐக்கிய நாடுகள் சபையின் மூலம் நிரந்தர நீதி கிடைக்க வழிகாணப்படும் என்றும் அந்தத் தேர்தல் அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.
அதேவேளை, இலங்கைத் தமிழ் அகதிகளுக்கு இரட்டைக் குடியிரிமை வழங்குவது அல்லது குடியிருப்பு அனுமதி வழங்கப்படும் என்பவை போன்ற விடயங்களும் அ.தி.மு.கவின் அறிக்கையில் உள்ளடக்கப்பட்டுள்ளன. (எ-இ)

### ஒரே குடும்பத்தில்...

நேற்று மதியம் இந்த விபத்து நடந்துள்ளது. மோட்டார் சைக்கிளில் மன்னார் நோக்கி இவர்கள் பயணித்தபோது மோட்டார் சைக்கிள் கட்டுப்பாட்டை இழந்து வீதியிலிருந்து விலகி, பனை மரத்துடன் மோதி விபத்துக்குள்ளாகியுள்ளது. மோட்டார் வண்டியில் பயணித்தோரில், ஒருவர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்துள்ளார். மற்றையவர் படுகாயமடைந்த நிலையில் மன்னார் மருத்துவமனைக்குக் கொண்டு செல்லப்பட்டபோதும், சிகிச்சை பயனின்றி உயிரிழந்தார்.
செட்டிக்குளத்தில் நடந்த மரணச் சடங்கு ஒன்றுக்குச் சென்றுவிட்டுத் திரும்பும் போதே இந்த விபத்து நடந்துள்ளது. உயிரிழந்தவர்கள் 36 மற்றும் 38 வயதுடையவர்கள் என்று பொலிஸார் தெரிவித்தனர்.
இந்த விபத்துச் சம்பவம் தொடர்பாக மன்னார் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (எ-56)



ஓமந்தை, இரம்பைக்குளத்தில் லொறி ஒன்று கட்டுப்பாட்டை இழந்து விபத்துக்குள்ளானது. விபத்தில் எவருக்கும் பாதிப்பு ஏற்படவில்லை. யாழ்ப்பாணத்தில் இருந்து தேங்காய் ஏற்றிச் சென்ற பாரவூர்தியே கட்டுப்பாட்டை இழந்து வீதியோரம் தடம்புரண்டது என்று தெரிவிக்கப்பட்டது. (எ-ரி2)

## கோவிட் தொற்றால் ஒருவர் உயிரிழப்பு!

கொழும்பு, மார்ச் 15
கொரோனாத் தொற்றால் நாட்டில் மேலும் ஒருவர் உயிரிழந்துள்ளார் என்று அரச தகவல் திணைக்களம் நேற்றிரவு அறிவித்தது.
வெலிகமவைச் சேர்ந்த 73 வயது ஆண் ஒருவரே உயிரிழந்துள்ளார்.
நாட்டில் கொரோனாத் தொற்றுக் காரணமாக உயிரிழந்தவர்களின் மொத்த எண்ணிக்கை 527 ஆக அதிகரித்துள்ளது. (எ-இ)


## துயர் பகிர்கின்றோம்

சங்க உறுப்பினர் திருமதி. சுமதி குலசபாநாதன்
அவர்களின் பாசமிகு தந்தையார்


### செல்லையா சண்முகநாதன்

அவர்கள் 13.02.2021 அன்று இறைபதமடைந்தார்.
அன்னாரின் பிரிவினால் துயருற்றிருக்கும்
குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத்
தெரிவிப்பதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடையவும்
இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

பிரதேச செயலக ஊழியர் நலன்புரிச் சங்கம்
தென்மராட்சி, சாவகச்சேரி

## 2ஆம் ஆண்டு நினைவலைகள்

### அமரர் சின்னத்துரை சற்குணரத்தினம்



(தபால் சேவகர், கொடிகாமம்)

தோற்றம் 26.05.1965 மறைவு 07.04.2019

இரண்டு ஆண்டுகள் கழிந்தாலும்
ஓவியமாய் பதிந்திருக்கிறது உங்கள் முகம்!
காவியமாய் வாழ்ந்தீர்கள்
உம்மை காலமெல்லாம் நினைத்திருப்போம்
தேனினிய உங்கள் குணம் தேடி நாம்
உருகுகின்றோம்.
ஆண்டவன் காலடியில் உங்கள் ஆத்மா
சாந்தியடைய பிரார்த்திக்கின்றோம்.

கொயிலாமனை, கொடிகாமம்.
076 848 4010

குடும்பத்தினர்.

## வேலையாட்கள் தேவை

**வலம்புரி ஹொட்டலில்**

- ✓காசாளர்
- ✓அறை பராமரிப்பாளர்
- ✓சுத்திகரிப்பாளர்
- ✓உணவு பரிமாறுபவர்

தொடர்புகளுக்கு: **0777 803 210**

**hr@valampurihotel.com**



## பெயர் மாற்றம்

154/71 ஆத்தி சூடி வீதி, கந்தர்மடம் யாழ்ப்பாண-த்தில் வசிக்கும் **மார்க்கண்டு சத்தியகுமார்** ஆகிய நான் எனது பெயரை **மார்க்கண்டு சந்திரகுமார்** என மாற்றம் செய்வதோடு இனிவரும் சகல ஆவணங்களிலும் மார்க்கண்டு சந்திரகுமார் என்றே கையொப்பம் இடுவேன் என இலங்கை சோசலிசக் குடியரசுக்கு அமைவாக உறுதிப்படுத்துகின்றேன்.

**மார்க்கண்டு சந்திரகுமார்**


# தரம் 6 மாணவர் அனுமதி தொடர்பான அறிவித்தல்

யாழ்/ வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலையில் தரம் 6 மாணவர்களை பாடசாலைக்கு இணைத்துக்கொள்ளும் செயற்பாடானது 15.03.2021, 18.03.2021 ஆகிய இரு தினங்களில் நடைபெறவுள்ளது.

கல்வி அமைச்சின் 173 வெட்டுப்புள்ளிக்கமைவாக கல்வி அமைச்சினால் பெயர் குறிப்பிடப்பட்ட மாணவர்களுக்கு கடிதம் அனுப்பி வைக்கப்பட்டிருப்பதுடன் கடிதம் கிடைக்கப்பெறாதவர்கள் பாடசாலை பெயர்ப்பலகையில் பார்வையிட முடியுமெனவும் பாடசாலை அபிவிருத்தி சங்கம் தெரிவித்துள்ளது.


## அரியாலை சனசமூக நிலைய முன்பள்ளிக்கான ஆசிரியர் தேவை

தகைமை - முன்பள்ளி டிப்ளோமா பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்

வயதெல்லை - 23 - தொடக்கம் 45 வரை

குறிப்பு : விண்ணப்பித்தவர்களும், விண்ணப்பிக்காதவர்களும் 18.03.2021 (வியாழக்கிழமை) அன்று பிற்பகல் 4.30 மணி தொடக்கம் 05.30 வரை நடைபெறும் நேர்முகத் தேர்வில் கலந்து கொள்ளலாம்.

தொலைபேசி இல
077 020 4134

செயலாளர்,
அரியாலை சனசமூக நிலையம்


## மரண அறிவித்தல்



### திருமதி ஞானாம்பிகை இராஜதுரை

அஞ்சலக வீதி, சாவகச்சேரியைச் சேர்ந்தவரும் Stouffville, Ontario, Canada இல் வசித்துவந்தவருமாகிய திருமதி ஞானாம்பிகை இராஜதுரை அவர்கள் 11.03.2021 வியாழக் கிழமை கனடாவில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற Dr.செ.இராஜதுரையின் மனைவியும் மட்டக்களப்பைச் சேர்ந்த காலஞ்சென்ற வேதவனம் திருப்பதி தம்பதிகளின் மகளும், காலஞ்சென்ற ஞானபூங்கோதை மகேசன், சிதம்பரநாதன், வெங்கடேசபிரபு, தனலக்சுமி குமரகுரு மற்றும் வடிவாம்பிகை மகேஸ்வரன் ஆகியோரின் சகோதரியும் கௌரி, கஜேந்திரன், சுமங்கலி, வாசுகி, உதேனி ஆகியோரின் தாயாரும் சிவனேசன், அமிர்தா, தேவா, சேந்தன், ரவி ஆகி யோரின் மாமியாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் கனடாவில் இடம்பெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்
**கௌரி சிவனேசன்**

## மரண அறிவித்தல்

தோற்றம்
15 . 06 . 1936



மறைவு
13 . 03 . 2021

### அமரர் நடராசா பவளம்

கரவெட்டி கிழக்கை பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட நடராசா பவளம் அவர்கள் 13.03.2021 சனிக்கிழமை அன்று காலமாகி விட்டார்.

அன்னார் இளைப்பாறிய அமரர் கதிர்காமு நடராசா அவர்களின் அன்பு மனைவியும், காலஞ்சென்றவர்களான சிவசம்பு நாகமுத்து தம்பதியினரின் அன்பு மகளும், செவ்வேள் (இளைப்பாறிய பருத்தித்துறை நகரசபை, யாழ் மாநகரசபை செயலாளர்), வரதன் (பிரான்ஸ்), வாசுகி, சேந்தன் (கனடா), வசுமதி (கனடா), பாரதி (ஆசிரியர்-மு/விசுவமடு மகா வித்தியாலயம்), ஜங்கரன் (ஆய்வு உத்தியோகத்தர் த. பீ, உள்ளூராட்சி திணைக்களம்-கிழக்கு மாகாணம்), பதுமினி ஆகியோரின் பாசமிகு தாயாரும், சாந்தினி (இலங்கை வங்கி), ஜெகதீஸ்வரி (பிரான்ஸ்), இராஜகோபால் வாசுகி (கனடா), பாலேந்திரநாதன் (கனடா), அமரர் பரமேஸ்வரன் (இளைப் பாறிய கோட்டக் கல்வி அதிகாரி புதுக்குடியிருப்பு), கலாராணி, வசந்தகுமார் (முன்னாள் பிரதேச செயலாளர் பூநகரி, மன்னார்), முசலி (மேலதிக அரசாங்க அதிபர் மன்னார்) ஆகியோரின் பாசமிகு மாமியாரும் ஆவார்.

அன்னார் இறுதி கிரியைகள் இன்று (15.03.2021) திங்கட்கிழமை காலை 10.00 மணி யளவில் அன்னாரது இல்லத்தில் நடைபெற்று தகனக்கிரியைக-ளிற்காக வீரக்களி இந்து மயானத்திற்கு எடுத்து செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
**ந. செவ்வேள் (மகன்)**

---

"உடையவன் இல்லாக் கருமம் ஒருமுழம் கட்டை" என்ற அறிவோர் வாக்கிற்கு இணங்க வாழ்ந்து மறைந்த எங்கள் குடும்ப ஒளி விளக்கின்

## பதினாறாம் ஆண்டு நினைவுத்துளிகள்

அன்னை மகிழ
02 . 06 . 1953



அன்னை தவிக்க
10 . 04 . 2005

### அமரர் சங்கரப்பிள்ளை வரதராசா

*(வள்ளல் வரதன்)*

நகரசபை உத்தியோகத்தர், சாவகச்சேரி

திதி : பூர்வபக்க துதியை

நேற்று போல் எல்லாம் என்
நெஞ்சோடு நினைவிருக்க
காற்றுப் போல் கண்களுக்கு
தோன்றாமல் நிற்கின்றான் - என்
முதல் பூத்த மூத்த முத்தே!

வானடைந்து ஈரெட்டு ஆண்டுகளானாலும்
உம் பிரிவுத்துயர் ஆறாது
நீங்கள் என்னை விட்டு
நீண்ட தூரம் சென்றாலும்
உங்கள் ஆசை முகம் என்
நெஞ்சில் நிலைத்திருக்கும்
என் அருமைக் கணவரே!

காலங்கள் உருண்ட போதிலும்
நீங்களின்றிய
துயரங்கள் இன்னும் ஆறவில்லை அப்பா!
எம்மைப் படைத்த எம் குலதெய்வமே
பணிகின்றோம் உங்கள் பாதம்தொட்டு

அன்பு பெருக அணைத்த கரங்களும்
நாம் ஆழ்ந்து உறங்கிய பாசமடியும்
இன்பம் தரும் தங்கள் இனிய சொற்களும்
இன்றியே நாங்கள் இயல்பிழந்தோம்
அப்பா!

பாசமான அப்பா உங்கள் முகம் காண
ஏங்கித் துடிக்கின்றோம் எங்களை
- வழிநடத்தி
அறிவூட்டி நீங்கள் பாதியில் விட்டுச்
சென்றதேனோ?

நிழல் போல் இருந்தீர்கள் அப்பா!
நினைவாய் மாறிவிட்டீர்கள்
கண் இமைக்கும் நேரத்தில்
கண்ணீர்த் துளியாகிவிட்டீர்கள்

எம் இதயங்களெல்லாம் நொருங்க
இமைகளெல்லாம் நனைய
எங்களைத் தவிக்க விட்டு
நெடுந்தூரம் சென்றதேனோ!

காலங்கள் பதிலளித்த போதிலும்
உங்கள் நினைவுகள் மனதில்
ஓயாத அலைகளால்
ஒவ்வொரு நாளும் ஏதோ ஓரிடத்தில்
உங்கள் ஞாபகம் அப்பா
மீண்டு வரமாட்டாரா என
ஏங்குவோம் நாங்கள்!

உங்களின் மீதான எங்களின்
தேடல்களை எங்கள் உயிர் மூச்சு
உள்ள வரை ஓயாது.

**ஓம் சாந்தி! ஓம் சாந்தி!! ஓம் சாந்தி!!!**

'சந்நிதி இல்லம்'
கைதடி கிழக்கு, கைதடி.

**என்றும் உங்களை மறவாத**
**குடும்பத்தினர்**

---

## நிர்வாகத் தெரிவு

யாழ்ப்பாணம், மார்ச் 15

சண்டிலிப்பாய் வடக்கு, ஆலங்குழாய் சனசமூக நிலைய புதிய நிர்வாகத் தெரிவு நேற்றுமுன்தினம் நிலைய மண்டபத்தில் நடைபெற்றது. தலைவராக சி.சுதர்சனும், செயலராக வி.குணபரனும், பொருளாளராக ந.பரந்தகனும், உப செயலராக ப.காண்டீபனும் தெரிவு செய்யபபட்டனர். அத்துடன் நிர்வாக உறுப்பினர்கள் ஆறு பேரும், பேசகர், கணக்காய்வாளர் ஆகியோரும் தெரிவு செய்யப்பட்டனர்.

(எ-63)

---


# பதவி வெற்றிடங்கள்

**வடக்கு மாகாண பொதுச்சேவையின் கூட்டுறவு அபிவிருத்தி உத்தியோகத்தர் தரம் III பதவிக்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்கான திறந்த போட்டிப் பரீட்சை – 2021**

தமிழ் மற்றும் சிங்களம் மொழி மூலம் மேற்படி பதவிக்குரிய போட்டிப் பரீட்சைக்கான விண்ணப்பம் வடக்கு மாகாண பொதுச்சேவை ஆணைக்குழுவின் செயலாளரினால் கோரப்பட்டுள்ளது. இப் பதவி வெற்றிடங்கள் திறந்த போட்டிப் பரீட்சை மூலம் நிரப்பப்படும். இவ் விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதி 2021.03.31 ஆகும்.

விண்ணப்பதாரிகள் www.np.gov.lk → Recruitment and Exam → Advertisement என்ற வடக்கு மாகாண சபையின் இணையத்தளத்திலும் மற்றும் வடக்கு மாகாணத்திற்குட்பட்ட உள்ளூராட்சிமன்ற அலுவலகங்களிலும் மேலே குறிப்பிடப்பட்ட பதவிக்கான ஆட்சேர்ப்புத் தொடர்பான விபரங்களை பார்வையிட்டு தகைமையுடையவர்கள் அம்மாதிரி விண்ணப்பப் படிவத்திற்கமைவாக விண்ணப்பிக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றீர்கள்.

**சி. திருவாகரன்**
**செயலாளர்,**
**மாகாண பொதுச்சேவை ஆணைக்குழு, வடக்கு மாகாணம்.**
**15.03.2021**

## மரண அறிவித்தல்

தோற்றம் 04 . 12 . 1942



மறைவு 14 . 03 . 2021

### செல்வி.பெரியநாயகி கதிரித்தம்பி

**(ஆயுர்வேத வைத்தியர், நயினாதீவு, நீர்கொழும்பு)**

நயினாதீவு 7ம் வட்டாரத்தை பிறப்பிடமாகவும் 51 சென் ஜோசப் வீதி, நீர்கொழும்பை வதிவிடமாகவும் கொண்ட செல்வி பெரியநாயகி கதிரித்தம்பி அவர்கள் நேற்று (14.03.2021) ஞாயிற்றுக்கிழமை கொழும்பில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கதிரித்தம்பி யோகம்மா தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்ற கனகம்மா மற்றும் சரஸ்வதி, சௌந்தரம் (ஓய்வுபெற்ற ஆசிரியை) ஆறுமுகம் (ஓய்வுபெற்ற D.O.A - இ.போ.ச கோண்டாவில் சாலை), குணபூசணி, கதிரேசபிள்ளை (ஓய்வு பெற்ற உதவிக் கல்விப் பணிப்பாளர், தீவகம்) ஆகியோரின் அன்புச் சகோதரியும், காலஞ்சென்றவர்களான இரத்தினசபாபதி (வர்த்தகர்), சொர்ணலிங்கம் (வர்த்தகர்), மயில்வாகனம் (ஓய்வுபெற்ற தபாலதிபர்), நடராசா (ஓய்வுபெற்ற தொழில்நுட்ப உத்தியோகத்தர்) மற்றும் திலகவதி, வரதலெட்சுமி (ஓய்வுபெற்ற அதிபர்) ஆகியோரின் அன்பு மைத்துனியும், கருணாநிதி, கமலபூசணி, கமலவேணி, கமலவதனி, சத்தியவாணி, லோகேஸ்வரன், கேதீஸ்வரி, ரதீஸ்வரி, ரமணி, மனோகரி, பகீரதி, மயூரதி, சுரநுதா, சோபிதா, மயூரன், நர்த்தனன், பிரணவன் ஆகியோரின் அன்புச் சித்தியும், நித்தியா, தற்பராநந்தா, முருகதாஸ், தர்ஸனன், கீர்த்தனன், பவந்தினி ஆகியோரின் அன்பு மாமியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (15.03.2021) திங்கட்கிழமை நண்பகல் 12.00 மணியளவில் நீர்கொழும்பு W.S மலர்ச்சாலையில் நடைபெற்று, பூதவுடல் நீர்கொழும்பு பொது மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார் உறவினர் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**தகவல்:**
**குடும்பத்தினர்.**

## கிருஷ்ணா அடகு சேவை

**பதிவு இல : J/DS/BR/472**

மேற்குறிப்பிட்ட எமது ஸ்தாபனத்தில் 2020 ஆம் ஆண்டு 31.05.2020 இற்கு முன்னர் அடகு நகைகள் யாவற்றையும் 2021 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 15 ஆம் திகதி (15.04.2021) இற்கு முன்னர் மீட்கவும்.

மீட்க முடியா விட்டால் ஒரு பகுதி பணத்தை கட்டி புதுப்பித்துக் கொள்ளவும் . புதுப்பிக்கத் தவறின் 15.04.2021 ஆம் திகதியன்று ஏலத்தில் விற்கப்படும் என்பதனை எமது வாடிக்கையாளர்களுக்கு அறியத் தருகின்றோம்.

குறிப்பு: 2020 ஆம் ஆண்டு 03 ஆம் மாதம் முதலாம் திகதி முதல் 2020 ஆம் ஆண்டு 5 ஆம் மாதம் திகதிக்கு இடைப்பட்ட நகைகள் யாவும் விற்கப்படும்.

**இல.307, கே.கே.எஸ். வீதி,**
**யாழ்ப்பாணம்.**
**021 4900311**

**உரிமையாளர்**
**இல. 09, கன்னாதிட்டி வீதி,**
**யாழ்ப்பாணம்**
**021 222 5046**

## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் 107ஆவது பிறந்த நாள் நினைவும்



### அமரர் கயிலாயபிள்ளை கெஜரெத்தினம்

நூற்றேழு ஆண்டுகளிம் மண்ணிலே வாழ்ந்து
நோய் நொடிகள் பெரிதாக ஏதுமேயின்றி
போற்றியே துதித்தென்றும் கந்தபுராணம் ஓதி
போகும் வரை நிதானமாய் கதைகள் பல பேசி
ஆற்றொணாத் துயரதனை நாமடைய வைத்து
ஆறுமுகன் திருவடிகள் அடைந்திட்ட ஐயா
சாற்றுகின்றோம் சுனைமலர்கள் தூவிநின் பாதம்
சாந்தி பெறும் நீங்களெமைக் காத்திடுவீர்
- என்றும்

மண்ணில் 15.03.1914 விண்ணில் 13.02.2021

**குடும்பத்தினர்**
**விவேகானந்தர் வீதி,**
**இணுவில்.**

## மரண அறிவித்தல்



### அருட்திரு.அருளானந்தம் கிங்ஸ்லி சுரேந்திரன்

**(சபைக்குரு, பண்டத்தரிப்பு, அமெரிக்கன் சிலோன் மிஷன் திருச்சபை)**

கரவெட்டி மத்தி கரவெட்டியை பிறப்பிடமாகவும், பண்டத்தரிப்பு சண்டிலிப்பாய் வீதி 'ராணிவிலா'வை வசிப்பிடமாகவும் கொண்ட அருட்திரு.அருளானந்தம் கிங்ஸ்லி சுரேந்திரன் அவர்கள் கடந்த (13.03.2021) சனிக்கிழமை கர்த்தருக்குள் நித்திரையடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான அருளானந்தம் சிவக்கொழுந்து தம்பதிகளின் மகனும், எமி அஜித்தா சுரேந்திரன் அவர்களின் அன்புக் கணவரும், அலன் அபிஷேக் (ஆசிரியர் பரி.யோவான் கல்லூரி, யாழ்ப்பாணம்), ஆன் அபிஷாரா ஆகியோரின் பாசமிகு தந்தையும், சுகுணவதனி (யாழ்ப்பாணம்), சுகுணேந்திரன் (பிரான்ஸ்), புனிதவதனி (கொழும்பு ), சுவர்ணவதனி (UK), சாமுவேல் சுபேந்திரன் (முகாமைக்குரு-மெதடிஸ்த திருச்சபை, புளியந்தீவு சேகரம்), ஷாமிலா (அஞ்சல் பயிற்சிக் கல்லூரி, யாழ்ப்பாணம்) ஆகியோரின் சகோதரனும், அனித்தா சிவகுமாரி (பிரான்ஸ்), நோயல் ஜெயகிஷன் (Ceylon Tapes, கொழும்பு), சுதர்ஷன் (UK), அனுஷா (ஆசிரியர், மட்டக்களப்பு), டினேஸ் குணரட்னம் (பிரதேச செயலகம், நல்லூர்), Dr. அனுஷியா குணராஜ் ஆகியோரின் மைத்துனரும், ஹனா, ஜோயன்னா ஆகியோரின். பெரிய தந்தையும், அனா, ஏமி, ஜோயல், ஜொனத்தன் ஆகியோரின் சிறிய தந்தையும் ஹெலன், பிரீத்தி, ஆத்மிகாவின் அன்பு மாமனாரும் ஆவார்.


அன்னாரின் பூதவுடல் இன்று (15.03.2021) திங்கட்கிழமை பிற்பகல் 1.00 மணியிலிருந்து பண்டத்தரிப்பு அமெரிக்கன் சிலோன் மிஷன் திருச்சபை தேவாலயத்தில் அஞ்சலிக்காக வைக்கப்பட்டு, தொடர்ந்து மாலை 3.30 மணிக்கு நல்லடக்க ஆராதனை இடம்பெற்று, அருகிலுள்ள பண்டத்தரிப்பு அமெரிக்கன் சிலோன் மிஷன் சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார் உறவினர் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**தொடர்பு:**
**077 825 9941**
**021 225 2579**

**தகவல்:**
**குடும்பத்தினர்.**

## அந்தியேட்டி அழைப்பும் நன்றி நவிலலும்

தோற்றம் 08 . 06 . 1937



மறைவு 16 . 02 . 2021

### அமரர் ஐயம்பிள்ளை அப்புக்குட்டி

கடந்த 16.02.2021 செவ்வாய்க்கிழமை அன்று சிவபதமடைந்த எமது குடும்பத் தலைவரின் அந்தியேட்டிக்கிரியைகள் 16.03.2021 செவ்வாய்க்கிழமை காலை 9.30 மணியளவில் கீரிமலை புனித தீர்த்தக்கரையிலும் வீட்டுக்கிருத்திய கிரியைகள் 18.03.2021 வியாழக்கிழமை நண்பகல் 12.00 மணியளவில் அன்னாரின் இல்லத்திலும் நடைபெறும். அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து அன்னாரது ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

மேலும் எமது குடும்பத்தலைவரின் மறைவு செய்தி கேட்டு எமக்கு பல்வேறு வழிகளில் உதவியும் ஆறுதல் அளித்த அனைவருக்கும் நேரிலும் சமூக வலைத்தளங்கள் மூலம் அனுதாபம் தெரிவித்தவர்களுக்கும், கண்ணீர் அஞ்சலிப் பிரசுரம் வெளியிட்டோருக்கும், மலர் வளையம் வைத்து அஞ்சலி செலுத்தியோருக்கும், போசனமளித்து உதவியவர்களுக்கும் மற்றும் சகல வழிகளிலும் ஒத்துழைப்பு வழங்கியோருக்கும் எமது இதயம் கனிந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்வதுடன் அவரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

**காந்திஜி வீதி,**
**கொக்குவில் மேற்கு, கொக்குவில்**

**குடும்பத்தினர்.**
**077 282 4047**

## ஐ.நா.

இவ்வாறு மக்கள் விடுதலை முன்னணி குற்றஞ்சாட்டியுள்ளது. மக்கள் விடுதலை முன்னணியின் நாடாளுமன்ற உறுப்பினர் விஜித ஹேரத் நேற்று நடத்திய ஊடக சந்திப்பில் இதனைத் தெரிவித்தார்.

உண்மையாக மாகாண சபைத் தேர்தலை நடத்தும் விருப்பம் அரசுக்கு இருக்குமானால் தேர்தல் எந்த முறைமையில் நடத்தப்படும் என்பதையே முதலில் அறிவிக்க வேண்டும் என்று அவர் தெரிவித்தார்.

மாகாண சபைத் தேர்தலை நடத்துவதற்கான முறைமை, எப்போது தேர்தல் நடத்தப்படும் என்பது தொடர்பில் அரசு உறுதியான நிலைப்பாட்டை நாட்டுக்கு அறிவிக்கவில்லை என்று குறிப்பிட்ட அவர், அரசுக்குப் பாதகமான விடயங்கள் பேசப்படும்போது, மக்களின் கவனத்தை திசைதிருப்ப வெவ்வேறு செய்திகளைப் பரப்புவது அரசின் வழமை என்றும் கூறினார்.

தற்போது சீனி மோசடி தொடர்பாக அதிகம் பேசப்படும் நிலையில், புர்காவைத் தடை செய்வதற்கான அமைச்சரவை யோசனையில் கையெழுத்திடப்பட்டுள்ளது என்று அமைச்சர் சரத் வீரசேகர தெரிவித்துள்ளார் என்று செய்திகள் வெளியாகியுள்ளன.

ஆனால் இந்த யோசனை அமைச்சரவையில் அங்கீகரிக்கப்படவில்லை. உண்மையான பிரச்சினைகளை மறைப்பதற்காக இப்படியான செயற்பாடுகள் முன்னெடுக்கப்படுகின்றனவா என்று சந்தேகம் எழுகின்றது என்றும் அவர் குறிப்பிட்டார்.

அதேவேளை, ஐ.நா. மனித உரிமைகள் சபையில் இலங்கை அரசுக்கு எதிராகக் கொண்டுவரப்படவுள்ள தீர்மானத்துக்கு 20க்கும் மேற்பட்ட நாடுகள் ஆதரவளிக்கும் என்று அறிய முடிகின்றது. 10க்கும் குறைவான நாடுகளே இலங்கை அரசுக்கு ஆதரவளிக்க ஒப்புக்கொண்டுள்ளன. அதையடுத்து தமக்கு ஆதரவு தேடும் நடவடிக்கையை இலங்கை அரசு தீவிரப்படுத்தியி ருக்கின்றது. அதன் ஒரு கட்டமாகவே மாகாண சபைத் தேர்தல் தொடர்பான அறிவிப்பு ஜனாதிபதியிடம் இருந்து வெளிவந்துள்ளது என்று அரசியல் நோக்கர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

மாகாண சபைத் தேர்தல் அறிவிப்பு, ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ச -இந்தியப் பிரதமர் மோடியுடன் நடத்திய தொலைபேசிப் பேச்சு என்பவையின் பின்னணியில் ஐ.நா. விவகாரமே உள்ளது என்றும் அறிய முடிகின்றது என்றார். (எ-இ)

## ஈழத்தமிழர்கள்...

ளார். இந்தியா ருடே ஊடகத்துக்கு வழங்கிய நேர்காணலிலேயே அவர் இவ்வாறு கூறியுள்ளார். ஈழத் தமிழர்கள் மீதான அக்கறை நியாயமானது. அது இயற்கையானது. தமிழகத்திலுள்ளவர்களுக்கும் ஈழத்தில் உள்ளவர்களுக்கும் இடையே மொழியால் உறவு இருக்கின்றது. தமிழகத்தில் உள்ளவர்களும் ஏனையவர்களும் ஒரு விடயத்தைப் புரிந்துகொள்ள வேண்டும். ஈழத் தமிழர்கள் மீதான அக்கறை என்பது, தேர்தலுக்கு ஒரு மாதத்துக்கு முன்பாக ஆரம்பித்து தேர்தல் முடிவடைந்த மறுநாள் முடிவடையும் விடயமாக இருக்கக் கூடாது. சிலவேளைகளில் தேர்தல் நெருங்கும்போது ஈழத் தமிழர்கள் மீதான கரிசனை அல்லது உணர்வு அதிகரிக்கும். பின்னர் அது தணிந்துபோகும் என்று அவர் கூறியுள்ளார். (ஓ.5)

## வவுனியாவில்...

னாத் தொற்றுக்கு இலக்காகியுள்ளனர். நேற்றும் இருவருக்கு தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளதை அடுத்து, புதிய கொரோனாக் கொத்தணி உருவாகலாம் என்ற அச்சம் ஏற்பட்டுள்ளது.

வவுனியா, கண்டி வீதியில் உள்ள இந்த ஆடைத் தொழிற்சாலையில் பணியாற்றுவோரில் சிலருக்கு வைரஸ் தொற்று உறுதிப்படுத்தப்பட்டதை அடுத்து, அங்கு பணியாற்றுபவர்களுக்கு பி.சி.ஆர். பரிசோதனை மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. நேற்றும் இருவருக்கு வைரஸ் தொற்றுள்ளமை உறுதிப்படுத்தப்பட்ட நிலையில், இதுவரை 23 பேருக்கு வைரஸ் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

இந்த ஆடைத் தொழிற்சாலையில் ஆயிரத்து 800 பேர் பணியாற்றுகின்றனர் என்றும், இதுவரை 800 பேருக்கு பி.சி.ஆர். பரிசோதனை மேற்கொள்ளப்பட்டுள்ளது என்றும் வவுனியா பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் எம். மகேந்திரன் தெரிவித்தார். (எ-18)

## வடக்கில்...

செய்யப்பட்டுள்ளது என்று வடக்கு மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர், மருத்துவர் ஆ.கேதீஸ்வரன் தெரிவித்தார்.

சண்டிலிப்பாய் சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் ஒருவருக்குத் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது. இவர் ஏற்கனவே இனங்காணப்பட்ட தொற்றாளருடன் நேரடித் தொடர்பைப் பேணியவர்.

யாழ்ப்பாணம் சிறைச்சாலைக் கைதிகள் 7 பேருக்கு வைரஸ் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது. சிறைச்சாலையில் ஏற்கனவே தொற்றாளர்கள் இனங்காணப்பட்ட நிலையில், அங்குள்ளவர்களுக்கு பி.சி.ஆர். பரிசோதனை மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

யாழ்ப்பாணம் மாநகரசபை எல்லைக்குள் 5பேருக்கு வைரஸ் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது. இவர்கள் ஏற்கனவே இனங்காணப்பட்ட தொற்றாளர்களின் குடும்ப உறுப்பினர்களாவர். வவுனியாவில் ஒருவருக்கு வைரஸ் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது. இவர் அங்குள்ள ஆடைத் தொழிற்சாலை ஒன்றில் தொற்றுடன் இனங்காணப்பட்ட ஒருவருடன் தொடர்பைப் பேணியவர் என்று தெரிவிக்கப்பட்டது. (எ-26)

## சான்றுப்பொருள்கள்...

முன்தினம் கைதுசெய்யப்பட்டுள்ளனர் என்று தெரிவித்த பொலிஸார், அவர்களில் இருவர் முல்லைதீவைச் சேர்ந்தவர்கள் என்றும் தெரிவித்தனர்.

முல்லைத்தீவு மாவட்ட நீதிவான் நீதிமன்றத்தின் பழைய கட்டடத்தில் வைக்கப்பட்ட வழங்குகளின் சான்றுப் பொருள்களே திருடப்பட்டுள்ளன என்று தெரிவிக்கப்படுகின்றது. அந்தக் கட்டடத்தில் உள்ள வழக்குகளின் சான்றுப் பொருள்களை பரிசீலனை செய்யும் நடவடிக்கைகள் தற்போது ஆரம்பிக்கப்பட்டுள்ளன என்று பொலிஸார் மேலும் தெரிவித்தனர். (எ-19)

## புலிகளின்...

யீட்டு ஆணையம், அந்த நாட்டின் 2000ஆம் ஆண்டு பயங்கரவாதச் சட்டத்தின் கீழ் அமைக்கப்பட்ட ஒரு சுயாதீன அமைப்பாகும். இந்த அமைப்பு அரசின் சட்டவிரோத அமைப்புக்களின் பட்டியலில் இருந்து விடுதலைப் புலிகள் அமைப்பை நீக்குவது தொடர்பாக உள்துறை அமைச்சர் பரிசீலிக்க வேண்டும் என்று தீர்ப்பளித்துள்ளது.

தமிழீழ விடுதலைப்புலிகள் அமைப்பை பிரிட்டன் 2001ஆம் ஆண்டு தடை செய்தது. இந்தத் தடைக்கு எதிராக நாடு கடந்த தமிழீழ அரசு அண்மையில் தடை செய்யப்பட்ட நிறுவனங்கள் மேன்முறையீட்டு ஆணையத்தில் வழக்குத் தாக்கல் செய்திருந்தது.

எனினும் பிரிட்டனில் பயங்கரவாத அச்சுறுத்தலை மதிப்பிடும் கூட்டுப் பயங்கரவாதப் பகுப்பாய்வு மையம் (ஜே.டி.ஏ.சி.), வன்முறையைக் கைவிடத் தவறியதால் விடுதலைப்புலிகள் அமைப்புக்கு தடை விதிக்கப்பட வேண்டும் என்று தெரிவித்துள்ளது. ஆனால் இந்தத் தடையை மீள்பரி சீலனை செய்ய வேண்டும் என்று தடை செய்யப்பட்ட மேன்முறையீட்டு ஆணையம் குறிப்பிட்டுள்ளது. தடையைப் புதுப்பிப்பதற்கான காரணங்கள் குறைபாடு உடையவை என்று ஆணையம் சுட்டிக்காட்டியுள்ளது.

இது தொடர்பில் உள்துறை அமைச்சு தெரிவிக்கையில், நாங்கள் தடை செய்யப்பட்ட மேன்முறையீட்டு ஆணையத்தின் முடிவை ஏற்றுக்கொள்கின்றோம். இது தொடர்பாக மேன்முறையீட்டாளரின் இறுதிப் பதிலுக்காகக் காத்திருக்கின்றோம். இந்த நேரத்தில் விடுதலைப் புலிகள் அமைப்பு தடை செய்யப்பட்ட அமைப்பாகவே இருக்கின்றது என்று குறிப்பிடப்பட்டுள்ளது என அந்தச் செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (எ-22)

## இலங்கையில்...

லண்டனில் 16 நாள்களாக உண்ணாவிரதம் இருந்து வரும் அம்பிகை செல்வகுமாருக்கு ஆதரவாக காணொலி ஒன்றை வெளியிட்டுள்ள அவர், இலங்கை அரசால் மேற்கொள்ளப்படும் அநீதிகள் மற்றும் மனித உரிமை மீறல்கள் ஆகியவற்றை மிக உயர்ந்த மட்டத்துக்குக் கொண்டு செல்லத் தான் நடவடிக்கை எடுத்தேன் என்றும் குறிப்பிட்டுள்ளார்.

பிரிட்டனில் ஆயிரக்கணக்கான இலங்கைத் தமிழ் மக்களைப் பிரதிநிதித்துவப்படுத்துவதில் பெருமை அடைகின்றேன். இலங்கையில் தமிழ் மக்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகள் தொடர்பில் அவர்கள் என்னுடன் அடிக்கடி பேசியுள்ளனர். அம்பிகையின் உண்ணாவிரதம் கவனிக்கப்படாது வீண்போகவில்லை என்றும் அவர் குறிப்பிட் டுள்ளார். அதேவேளை, இலங்கை அரசை சர்வதேச நீதிமன்றில் பாரப்படுத்த வலியுறுத்தி பிரிட்டனில் அம்பிகை செல்வகுமார் மேற்கொண்டுவரும் உணவு தவிர்ப்புப் போராட்டம் நேற்றுப் 16 நாளாகவும் தொடர்ந்தது. (எ-22)

## மார்ச் 17...

காலத்தின் தேவை கருதி அனைவரும் இணைய வேண்டும். இவ்வாறு யாழ்ப்பாணம் மற்றும் கிழக்குப் பல்கலைக்கழக மாணவர்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர். இறுதிப் போரில் இடம்பெற்ற மனிதப் படுகொலைகளுக்கு சர்வதேசத்தின் மூலமே தீர்வைப் பெற முடியும் என்று தமிழ் மக்கள் எதிர்பார்க்கின்றனர். அதற்கான அழுத்தங்களை இலங்கை அரசுக்குக் கொடுக்க ஐ.நா. உறுப்பு நாடுகள் முன்வர வேண்டும்.

தமிழ் மக்களுக்கு எதிராக நடத்தப்பட்ட மனித உரிமை மீறல்களுக்கு நீதி வேண்டி வடக்கு, கிழக்கு மாகாணங்களில் சுழற்சி முறையில் போராட்டங்கள் நடத்தப்பட்டு வருகின்றன.

சர்வதேசத்தின் கவனத்தை ஈர்ப்பதற்காக நாளைமறுதினம் புதன்கிழமை நல்லூர் முத்திரைச் சந்தியில் இருந்து ஆரம்பமாகும் பேரணி தற்போது உணவு தவிர்ப்புப் போராட்டம் நடத்தப்படும் இடத்தில் முடிவடையவுள்ளது. தூதரங்களுக்குக் கையளிப்பதற்கான கடிதங்களும் வழங்கப்படவுள்ளன.

காலத்தின் தேவை கருதி இந்தப் போராட்டத்தை வெற்றிபெற வைக்க வேண்டும். பாடசாலை மாணவர்கள், சிவில் அமைப்புக்கள், அரசியல்வாதிகள், சமயத் தலைவர்கள் மற்றும் இளைஞர் யுவதிகள் என அனைவரும் இந்தப் பேரணியில் கலந்துகொள்ள வேண்டும் என்று வேண்டுகோள் முன்வைக் கப்பட்டுள்ளது. (எ-20)

## நல்லூர்...

குற்றங்களுக்கான பொறுப்புக்கூறலை அரசு ஏற்றுக்கொள்வதற்கான பிரேரணையை ஐ.நா. மனித உரிமைகள் சபையில் நிறைவேற்ற வலியுறுத்தியும் நாளைமறுதினம் நடக்கவுள்ள பேரணிக்கு அனைத்துத் தரப்பினரும் ஆதரவு வழங்க வேண்டும்.

இவ்வாறு இலங்கைத் தமிழரசுக் கட்சியின் தலைவரும், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினருமான மாவை சோ. சேனாதிராசா அழைப்பு விடுத்துள்ளார்.

தமிழ் இனத்தின் தமிழர் தேசத்தின் விடுதலைக்காகவும், விடிவுக்காகவும் தமிழினத்தின் எதிர்காலச் சந்ததி, இளைய சமுதாயம் மேற்கொள்ளும் அர்ப்பணிப்புமிக்க செயற்பாடுகளுக்கு நாம் அனைவரும ஒன்றுபட்டு ஆதரவு வழங்குவோம் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் நேற்று அவர் விடுத்துள்ள அறிக்கையிலேயே இவ்வாறு குறிப்பிட்டுள்ளார். இது தொடர்பில் அவர் தெரிவித்துள்ளதாவது:

கடந்த காலங்களில் அணிதிரண்ட மக்கள், தமது பலத்தைத் தொடர்ந்து பேண வேண்டும். பலவீனமடைய விடக் கூடாது. ஐ.நா. மனிதஉரிமைகள் ஆணையாளர் முன்வைத்த அறிக்கை மிகவும் காத்திரமானதாகும். அந்த அறிக்கையின்படி இலங்கை மீது ஒரு தீர்மானம் எடுக்கப்பட்டால் அதற்கு அப்பால் இலங்கையை சர்வதேச குற்றவியல் விசாரணைக்குப் பரிந்துரை செய்யப்படுமானால் அவை கணிசமான முன்னேற்றமாக அமையும்.

ஆனால் அந்த அறிக்கையின்படி நிறைவேற்றக்கூடிய தீர்மானங்களை எடுப்பதற்குப் போதிய பெரும்பான்மையைப் பெற வேண்டும். அதற்கான இராஜதந்திர முயற்சிகள் நடக்கின்றன. அதேநேரம், மனித உரிமைகள் சபையில் நிறைவேற்றக்கூடிய தீர்மானங்களை நிறைவேற்ற வேண்டியதும் தேவையானதே. மனித உரிமைகள் சபையில் நிறைவேற்ற முடியாத விதிமுறைகளும் உண்டு. அவற்றை நிறைவேற்ற பாதுகாப்புச் சபையில் தீர்மானம் எடுக்கப்பட வேண்டும். அது மிகுந்த சவாலுக்குரியது. அவ்வாறான சந்தர்ப்பம் உருவாக வல்லான்மைச் சக்திகளின் இராஜதந்திரோபாய வெற்றிகள் அவசியமாகும். இந்தநிலைமையில் தமிழ்த் தேச மக்கள் இலங்கையிலும், சர்வதேச அரங்கிலும் ஒரே குரலில் உயர்ந்த நிபுணத்துவப் பங்களிப்புடன் ஒன்றுபட்ட கட்டமைப்பில் செயற்படுவதற்குத் திடசங்கற்பத்துடன் உறுதி கொள்ள வேண்டும்.

அந்தவழியில் இடம்பெறும் அனைத்து ஜனநாயகச் செயற்பாடுகளையும் ஆதரிப்பதும், அதில் பங்கெடுப்பதும் தற்போதைய தேவையாகும். நாளைமறுதினம் நடக்கவுள்ள பேரணி வெற்றி பெற நாம் அனைவரும் ஒன்றுபட்டு உழைப்போம்-என்றுள்ளது. (எ-இ)

© 2000 Agfa-Gevaert N.V.

# மியான்மர் நிலை மோசமடைகிறது

## இராணுவ ஆட்சிக்கு எதிராக லட்சக்கணக்கானோர் வீதியில்

**நைபிட்டோ, மார்ச் 15**
**மியான்மரில் இராணுவ ஆட்சிக்கு எதிராக லட்சக் கணக்கான மக்கள் வீதியில் இறங்கிப் போராடி வருகின்றனர். அங்கு நாளுக்குநாள் நிலைமை மோசமடைந்து வருகின்றது என்று சர்வதேச அமைப்புக்கள் சுட்டிக்காட்டியுள்ளன.**




மியான்மரில் ஆங் சான் சூச்சி தலைமையிலான ஆட்சியைக் கலைத்து அந்த நாட்டு இராணுவம், அடுத்த ஓர் ஆண்டுக்கு அவசர நிலையையும் இராணுவ ஆட்சியையும் அறிவித்தது. அத்துடன் சூச்சியும் அவரது கட்சியினரும் முக்கியஸ்தர்களும் சிறைப்பிடிக்கப்பட்டனர். அவர்கள் அனைவரும் வீட்டுக்காவலில் வைக்கப்பட்டுள்ளனர். அத்துடன் நீண்டகால சிறைத்தண்டனையை வழங்கவும் இராணுவத்தால் நகர்வுகள் முன்னெடுக்கப்படுகின்றன என்று தெரிவிக்கப்படுகின்றது.

இந்த நிலையில், சூச்சியின் ஆட்சியே தேவை என்று வலியுறுத்தியும், மியான்மர் மக்கள் இராணுவ ஆட்சியை தெரிந்தெடுக்கவில்லை என்று தெரிவித்தும் அந்த நாட்டு மக்கள் வீதிகளில் இறங்கிப் போராடி வருகின்றனர். ஆரம்பத்தில் இளைஞர்களால் முன்னெடுக்கப்பட்ட இந்தப் போராட்டம் தற்போது அனைத்துத் தரப்பினராலும் முன்னெடுக்கப்படுகின்றது. அத்துடன் மதத் தலைவர்களும், பொலிஸாரில் ஒரு பிரிவினரும் போராட்டத்துக்கு ஆதரவு தெரிவித்துள்ளனர்.

தலைநகர் நைபிட்டோ, வர்த்தக நகர் யாங்கூன் உள்ளிட்ட பல இடங்களில் போராட்டங்கள் கலவரமாக மாற்றப்பட்டுள்ளன. போராட்டங்களை கட்டுப்படுத்த இராணுவத்தால் மேற்கொள்ளப்பட்ட துப்பாக்கிச் சூட்டில் இதுவரை 75க்கும் அதிகமானோர் உயிரிழந்துள்ளனர். நாளுக்கு நாள் போராட்டம் தீவிரமாகி வருகின்றது என்று சர்வதேச அமைப்புக்கள் மேலும் சுட்டுகின்றன. (ம)

IT Training
வேலை வாய்ப்பு, ஊக்குவிப்பு தொகையுடன் கூடிய கணினி தொழிற்பயிற்சி,
(Software, Web Development Project Training)
Dewmas Job Bank
51, Amman Road, Nallur.
074 138 3368

## மியான்மர் மக்களுக்கு தற்காலிக அடைக்கலம்

### அமெரிக்கா அறிவிப்பு




இராணுவ ஆட்சி, உள்நாட்டுக் கலவரம் காரணமாக நாடு திரும்ப முடியாமல் தவிக்கும் மியான்மர் மக்களுக்கு தற்காலிக அடைக்கலம் வழங்கப்படும் என்று அமெரிக்கா அறிவித்துள்ளது.

மியான்மரில் ஆங் சான் சூச்சி தலைமையிலான ஆட்சி அகற்றப்பட்டு அங்கு இராணுவ ஆட்சி அறிவிக்கப்பட்டு நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது. இராணுவ ஆட்சிக்கு எதிராக மியான்மர் எங்கும் போராட்டங் களும் கலவரங்களும் வெடித்துள்ளன. இந்த நிலைமை கவலை தருகின்றது என்று ஐக்கிய நாடுகள் சபை அண்மையில் அறிவித்திருந்தது. அத்துடன் மியான்மரின் நிலைமையைக் கவனிக்கின்றோம். மியான்மர் இராணுவத்துக்கு எதிராக உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்று அமெரிக்கா ஏற்கனவே அறிவித்திருந்தது.

இந்த நிலையில், இராணுவ ஆட்சி, உள்நாட்டுக் கலவரம் காரணமாக நாடு திரும்ப முடியாமல் தவிக்கும் மியான்மர் மக்களுக்கு தற்காலிக அடைக்கலம் வழங்கப்படும் என்று அமெரிக்கா தற்போது அறிவித்துள்ளது. (ம)

## பிளொய்ட் குடும்பத்துக்கு 540 கோடி ரூபா இழப்பீடு



வொஷிங்டன், மார்ச் 15
அமெரிக்கப் பொலிஸாரின் அடாவடித் தனத்தால் கடந்த வருடம் கொல்லப்பட்ட ஜோர்ஜ் புளொய்ட் என்ற கறுப்பினத்தவரின் சாவுக்கு இழப்பீடாக அவரது குடும்பத்தினருக்கு இலங்கை மதிப்பில் சுமார் 540 கோடி ரூபா வழங்கப்படவுள்ளது.


கடந்த வருடம் மே மாதம் ஜோர்ஜ் புளொய்ட் பொலிஸாரின் அடாவடித் தனத்தால் கொல்லப்பட்டார். பொலிஸ் அதிகாரியொருவர் புளொய்ட்டின் கழுத்தில் முழங்காலை வைத்து அழுத்தியதை அடுத்து அவர் மூச்சுத் திணறி உயிரிழந்தார்.

இதையடுத்து அவரின் சாவுக்கு நீதிவேண்டி உலகமெங்கும் போராட்டங்கள் வெடித்தன. புளொய்ட்டின் குடும்பத்தினர் சம்பவம் நடந்த மினியாபொலிஸ் நிர்வாகத்துக்கு எதிராக வழக்குத் தொடர்ந்தனர். இதையடுத்தே அவரின் குடும்பத்துக்கு மேற்படி தொகையை இழப்பீடாகச் செலுத்த மினியாபொலிஸ் நிர்வாகம் முன்வந்துள்ளது. (ம)

வேலையாட்கள் தேவையா?
உங்கள் நிறுவனங்களுக்கு தேவையான உத்தியோகத்-தர்களை (Data Entry Operator, Clerk, Office staff....) எம்மிடம் தெரிவு செய்து பெற்றுக் கொள்ளலாம்.
Dewmas Job Bank
51, Amman Road,
Nallur.
021 315 2500
074 138 3368

A/L - 2K23
(கலை, வர்த்தகம், தொழில்நுட்பம்)
மார்ச் - 20
காலை 9.00 மணி
DMI JAFFNA

A/L 2023
பௌதிகவியல்
English M/d, தமிழ் மூலம்
Mr.M.Karunanithy B.Sc (Hons)
ஆரம்பம் : 20.03.2021 சனி
பிரிவு 1 : 11.30 AM
பிரிவு 2 : 03.30 PM
கன்னாதிட்டி வீதி (பெருமாள் கோவில் லேன்)
(Science Hall அருகில்)
077 618 3064



மியான்மரில் இராணுவ ஆட்சிக்கு எதிராக மேற்கொள்ளப்பட்டுவரும் போராட்டங்களில் இராணுவத்தினர் மேற்கொண்ட துப்பாக்கிச் சூட்டாலும் இன்னும் பல அடக்குமுறையாலும் பலர் உயிரிழந்துள்ள நிலையில் அவ்வாறு உயிரிழந்தவர்களுக்கு போராட்டக் காரர்களால் போராட்டக் களங்களில் அஞ்சலி செலுத்தப்படுகின்றது. (ம)

ALLIANCE FRANCAISE DE JAFFNA
af பிரெஞ்சு மொழி
- யாழ்ப்பாணத்தில் French Embassy கீழ் இயங்கும் சர்வதேச நிறுவனம் Alliance Francaise மட்டுமே.
- அங்கீகரிக்கப்பட்ட Certificates International Diplomas (delf)
- தமிழ் மொழிமூலம் பிரஞ்சு நாட்டு ஆசிரியரினாலும் கற்பிக்கப்படும்
- French Embassy இன் அனுமதியுடன் திருமண அத்தாட்சிப் பத்திரங்கள் தமிழ் மொழி மூலம் மொழி பெயர்ப்புச் செய்து கொடுக்கப்படும். (இங்கே மட்டும்).



021 222 8093 17, Kandy Road, Jaffna



இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 15.03.2021 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.